முனைவர்.பா.பொன்னி



# சிலம்பு

# சிலம்பு

## முனைவர் பா.பொன்னி

**ISBN 978-93-80368-38-2**

**கந்தகப்பூக்கள் பதிப்பகம்**
2/2440F2, கவிதா நகர்,
ஜக்கம்மாள் கோவில் பின்புறம்,
சிவகாசி – 626 123.
செல்லிடபேசி : +91 98435 77110
மின்னஞ்சல் : kandhagapookalsreepathy@gmail.com

| | | |
|---|---|---|
| **நூல்** | | **சிலம்பு** |
| **ஆசிரியர்:** | | **முனைவர் பா.பொன்னி**<br>தலைவர், தமிழ்த்துறை,<br>தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ்<br>இராஜரத்தினம் மகளிர் கல்லூரி(தன்னாட்சி )<br>சிவகாசி – 626 123. |
| உரிமை | : | நூலாசிரியர் |
| முதல் பதிப்பு | : | 2020 |
| **பதிப்பாளர்** | **:** | **கந்தகப்பூக்கள் பதிப்பகம்,**<br>2/2440F2, கவிதா நகர்,<br>ஜக்கம்மாள் கோவில் பின்புறம்,<br>சிவகாசி – 626 123.<br>+91 98435 77110<br>kandhagapookalsreepathy@gmail.com |
| புத்தக எண் | : | ISBN 978-93-80368-38-2 |
| தாள் | : | 70 ஜி.எஸ்.எம். மேப் லித்தோ |
| அச்சகம் | : | கந்தகப்பூக்கள் அச்சகம், சிவகாசி. |
| பக்கம் | : | 128 |
| விலை | : | **150.00** |

Title : Silambu / Author : Dr. B. Ponni / ISBN : 978-93-80368-38-2 / Copy right : Author / 1st Edition : 2020 / Published by : Kandhagapookal Pathipagam( National level ), 2/2440F2, Kavitha Nagar, Jakkammal Koil Backside, Sivakasi – 626 123. Tamil Nadu, India. Cell : 98435 77110 / Paper : 70 gsm Maplitho / Pages : 128 / Printed by : Kandhagapookal Achchagam, Sivakasi. Cell : 98435 77110 / Price : **Rs. 150.00**

# பொருளடக்கம்


1. கண்ணகியின் ஆளுமைப் பண்புகள்
2. சிலப்பதிகாரத்தில் கற்பு மூலப்படிவம்
3. காஞ்சனனின் ஆளுமை
4. சிலம்பில் சங்க இலக்கியச் சுவடுகளும் சுவடுமாற்றங்களும்
5. உளவியல் நோக்கில் சித்திராபதி
6. சிலம்பில் முரண்கள்
7. சிலம்பில் வஞ்சினம்
8. சிலம்பில் வைணவம்
9. மாதவியின் ஆளுமைத்திறம்
10. சிலம்பில் வணிகக்களங்கள்

## கண்ணகியின் ஆளுமைப் பண்புகள்

மனிதன் அவன் வாழக் கூடிய சூழ்நிலைக்கு ஏற்ப செயல்படும் வினைக்குக் காரணமாக அமைவது அவனது ஆளுமைப் பண்பே ஆகும். தனிமனிதனின் நடத்தையையும் அனுபவத்தையும் பாதிக்கக் கூடிய அனைத்துக் கூறுகளையும் ஆளுமை பற்றிய ஆய்வுக்குள் அடக்கிவிட முடியும். ஒருவனது ஆளுமையை நிர்ணயிக்கும் காரணிகளுள் முதன்மையானவை உணர்வெழுச்சி, மனவெழுச்சி, ஊக்கிகள் போன்றவையாகும். இவற்றின் மூலமாக அவனது தனித்தன்மையை அறிந்து கொள்ள முடியும். சிலப்பதிகாரத் தலைவியான கண்ணகியின் ஆளுமைப் பண்புகள் இங்கு ஆராயப்படுகின்றன.

### ஆளுமை – சொற்பொருள்

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ஆளுமை என்பதற்கு “ஒரு மனிதனின் தனிப்பட்ட குணத்தொகுப்பு; Personality, individuality. முரட்டுத்தனமும் ஆளுமையின் வெளிப்பாடுதான்”[1] என்று விளக்கம் தருகிறது.

நர்மதாவின் தமிழ் அகராதி, ஆளுமை என்பதற்கு “உரிமை, அதிகாரம், ஒரு மனிதருடைய தனிப்பட்ட குணத்தொகுப்பு மேலோங்கி நிற்கும் நிலை right of the Possession, Ownership etc, Personality : dominance”[2] என்று விளக்கம் தருகிறது. இதன்வழி ஆளுமை என்பதனை ஒருவருடைய குணத்தொகுப்பு எனக்கருத முடிகிறது.

### காரல் கசுதவ் யுங்

ஆளுமை பற்றிய விரிவான கருத்துக்களை எடுத்துரைத்தவர்களுள் முதன்மையானவர் காரல் கசுதவ் யுங்கு ஆவார். தனிமனிதனின் உள்ஊக்குத் திறன் (Pshychic Energy) சமூக அழுத்தங்களுக்கும் மரபுகளுக்கும் உட்பட்டு, ஒரு குறிப்பிட்ட உருவத்தைக் கொண்டு ஒரு குறிப்பிட்ட செயலை மட்டும் செய்து முடிக்கும் நோக்கத்துடன் இயங்குகிறது. உள்ஊக்குத் திறனின் இத்தகைய சமூகப்பங்கு நாளடைவில் ஓர் முகமூடியாக (Persona) அமைந்து விடுகிறது என்றும், சமூக ஏற்புக் கிடைக்காத விருப்பங்களும் உந்துகளும் ஒருங்குபட்டுத் தனி நனவிலியாக (Personal unconscious) அமைந்துள்ளன என்பது யுங் அவர்களின் கருத்தாகும்.

ஒருவன் தனித்தன்மை பெற்ற சிறந்த ஆளுமை உடையவனாகத் திகழ்வதற்குக் காரணம் அவனிடம் காணப்படக் கூடிய இயல்பூக்கங்களும்,

உள்ளக் கிளர்ச்சிகளுமே ஆகும். மேலும் மனிதர்களிடம் காணப்படக் கூடிய பாரம்பரிய இயல்புகளும் (Hereditary traits) அனுபவத்தால் ஈட்டிய இயல்புகளும் (Acquired traits) ஒருங்கே சேர்வதன் மூலமாகவும் ஆளுமை வலுப்பெறுகிறது. அதோடு மட்டுமல்லாது மனிதனது நனவிலி மனச் சக்தியும் (Unconcious Psyche Energy) சூழ்நிலைச் சக்தியும் (Environmental Force) ஒன்றோடொன்று மோதுவதினாலும் இழைவதினாலும் தனிமனிதன் ஆளுமை சிறப்பு பெற்று விளங்குகிறது என்று யுங் குறிப்பிடுகிறார்.

**கண்ணகியின் பண்பு நலன்கள்**

மனிதனின் ஆளுமையை நிர்ணயிக்கும் காரணிகளுள் ஒன்று அவனது பண்பு நலன்கள் ஆகும். பண்பு என்ற சொல்லிற்கு "குணம், தகுதி, இயல்பு, முறை, மனத்தன்மை, செய்கை, அழகு, விதம் எனப் பல பொருள்கள் சொல்லப்படுகின்றன. நலன் என்ற சொல்லும் நலம் என்ற சொல்லும் ஒன்றேயாகும். இச்சொல்லிற்கு சுகவாழ்வு, இன்பம், அழகு, பயன், புகழ், உயர்வு , உதவி, கண்ணோட்டம்"[3] எனப் பல பொருள்கள் சொல்லப்படுகின்றன. ஒருவரின் பண்புநலன்கள் அவன் வாழக்கூடிய சூழ்நிலைக்கு ஏற்ப நன்மை உடையதாகவோ, தீமை உடையதாகவோ மாறுபட்டுக் காணப்படுகின்றன.

கண்ணகியினை பிறருடைய இயல்பை அறிந்து நடக்கக் கூடிய தன்மை உடையவளாகவும் அனைவராலும் போற்றக் கூடிய சிறப்பு மிக்கவளாகவும் இளங்கோ அறிமுகம் செய்வதனை,

"அவளுந்தான்
போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்
காதலார் பெயர் மன்னுங் கண்ணகியென் பாள்மன்னோ"

(மங்கல வாழ்த்துப் பாடல் . 25-29)

என்ற அடிகள் வழி அறியமுடிகிறது. இவ்வடிகள் வாயிலாக இளங்கோவடிகள் கண்ணகியின் புறத்தோற்றத்தை இலட்சுமியின் திருவுருவத்தை ஒத்த தன்மை

உடையவளாகவும், அவளது கற்பு நெறியை அருந்ததியின் கற்பை ஒத்த திறமுடையவளாகவும் சிறப்பித்துள்ளமையை அறிய முடிகின்றது.

கண்ணகி உள்ள ஆளுமை மற்றும் உருவ ஆளுமை ஆகிய இரண்டிலும் சிறப்புமிக்கவளாகத் திகழ்கிறாள்.

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறல் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே"

(மனையறம் படுத்த காதை- 73-76)

என்ற கோவலனின் புகழுரைகள் மூலமாக கண்ணகியின் புறத்தோற்றத்தையும், அவளது சாயல், நடை, மொழி ஆகியவற்றையும் அறிய முடிகின்றது. கண்ணகி புறத்தோற்றத்தில் மட்டுமல்லாது அகஉணர்வுகளாலும் தனித்தன்மை வாய்ந்தவளாகத் திகழ்வதனை அறியமுடிகிறது.

கண்ணகி தன்னை விட்டுப் பிரிந்து சென்ற கோவலனின் தவறை மன்னிக்கும் மனப்பான்மை உடையவளாகவும், பெரியோர் சொற்களைக் கேட்டு நடக்கக் கூடிய இயல்புடையவளாகவும், வம்பப் பரத்தையின் நகை மொழி கேட்டு அச்சப்படக் கூடியவளாகவும் திகழ்கின்றாள். சாலினி என்ற பெண் தெய்வமேற்றுக் கண்ணகியைப் புகழும் போது நாணமடையக் கூடியவளாகவும் இருக்கின்றாள். இவ்வியல்புகள் கண்ணகியை அகமுகத் தன்மை உடையவளாக அடையாளப்படுத்துகின்றன. இருப்பினும் காப்பியப்போக்கில் ஏற்படும் மாற்றங்கள் அவளை புறமுகத்தவளாக மாற்றம் அடையச் செய்கின்றன.

கண்ணகி கோவலன் இறந்த செய்தியை அறிந்த பின் கடுஞ்சினம் அடைபவளாகவும், மன்னனின் தவறான நீதியைக் கண்டு வெகுண்டு எழுந்து வஞ்சினம் உரைப்பவளாகவும் மாற்றம் அடைகிறாள். இப்பண்புநலன்கள் புற முகத்தவருக்கே உரியதாகும். இந்த இரு மனப்போக்கும் இணைந்த இருமை நோக்காளராக கண்ணகி பாத்திரம் மாற்றம் அடைகிறது.

கண்ணகியின் ஆளுமை காப்பியத்திற்கு வலிமை சேர்க்கும் விதமாக அமைவதற்குக் காரணம் அவளிடம் காணப்பட்ட மனவெழுச்சியே எனலாம்.

**மனவெழுச்சி**

உணர்ச்சி என்பது உயிரினத்தில் காணப்படும் தூண்டப்பட்ட அல்லது கிளர்ச்சி வசப்பட்ட நிலையினைக் குறிக்கிறது. வாழ்க்கையில் மக்கள் பல்வகை உணர்ச்சிகளைப் பெறுகிறார்கள். மக்களின் அனைத்து செயல்களுக்கும் முக்கிய காரணமாக அமைவது உணர்ச்சியே ஆகும். உணர்ச்சியைப் (Feeling) போலவே மனவெழுச்சியும் (Emotion) கிளர்ச்சியடைந்த உயிரினத்தில் காணப்படும் நிலை எனலாம். இன்பதுன்பங்களை மக்கள் உடலெங்கும் உணருவதைப் போலவே பயம், கோபம், குதூகலம் (Amusement) போன்ற மனவெழுச்சிகளையும் உடலெங்கும் உணருகின்றனர். மனவெழுச்சி அறிவிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். அறிவு மூளைக்குச் சொந்தமானது. ஆனால் மனவெழுச்சியோ இருதயத்துக்குச் சொந்தமானதாகும். அன்றாட வாழ்க்கையில் அறிவுக்கும் மனவெழுச்சிக்கும் போராட்டம் வரும் போது, பெரும்பாலும் மனவெழுச்சியே அதிக வலுவைப் பெற்று ஒருவருடைய செயலைத் திசை திருப்பிவிடுகிறது. ஆகவே மனிதனை மனவெழுச்சிக்கு அடிமையானவன் எனக் கூறலாம். கண்ணகியின் ஆளுமைப் பண்புகளில் அதிக அளவில் மனவெழுச்சி தொடர்பான பண்புகளைக் காணமுடிகின்றது.

**மனவெழுச்சியின் வகைகள்**

மனவெழுச்சிகள் மூளையின் மத்தியில் உள்ள இணைக்கும் வளையத் (Lymphatic System) திலிருந்து வருவதாக உளவியலாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

மனவெழுச்சிகளை இரண்டு வகைகளாகப் பிரிப்பர். “பாசம், சினம், மகிழ்ச்சி, வியப்பு, அச்சம், கருணை, கூச்சம் ஆகியவை அடிப்படையான மனவெழுச்சிகள். பொறாமை, போற்றுதல், சாதித்தல் ஆகியவை கற்றுக் கொண்டவை”[4] என்று குறிப்பிடுவர்.

### அடிப்படை மனவெழுச்சிகள்

குழந்தைப்பருவத்திலிருந்தே ஒருவரிடம் காணப்படும் மனவெழுச்சிகள் அடிப்படை மனவெழுச்சிகள் எனப்படும். மனவெழுச்சிகளைப் பற்றிய பல சோதனைகளை நடத்திய வாட்சன் (Watson) என்பார் சினம் அச்சம் அன்பு என்று மூன்று மெய்ப்பாடுகளை அடிப்படை மனவெழுச்சிகள் என்று குறிப்பிடுகிறார்.

பிரிட்ச்சு (Bridges) என்னும் உளவியல் அறிஞர் "இளங்குழவியின் மனவெழுச்சி பண்படாத அடிப்படைக் கிளர்ச்சியாக இருக்கும் என்று கருதுகிறார்.குழந்தை வளர வளர இக்கிளர்ச்சி மகிழ்ச்சி துயரம் என்னும் இரு பிரிவுகளாக இருக்கும் என்று கருதுகிறார்.துயரமானது பின்னர் அச்சம் சினம் என்னும் இரு பெருங்கிளையாகப் பிரிகிறது.இந்த மனவெழுச்சிகளே ஒன்றுடன் ஒன்று பலவாறாக இணைந்து பொறாமை போன்ற மனவெழுச்சிகளின் ஆதாரமாக அமைகின்றது"5 என்பார்.இவ்வடிப்படை மனவெழுச்சிகளை அடிப்படைச் செயல்பாடுகள் எனவும் குறிப்பிடுவர். "உளவியலார் பொதுவாக ஒருவனிடம் பிறப்பால் அமையும் மெய்ப்பாடுகள் அச்சம் சினம் மகிழ்ச்சி எனக் கருதுகிறார்கள்"[6]

இந்த அடிப்படை மனவெழுச்சிகள் கண்ணகியின் ஆளுமைப் பண்பில் இன்றியமையாத இடம் வகிப்பதனை அறியமுடிகிறது.

### அச்சம்

அச்சம் என்பது ஓர் எதிர்மறை மன வெழுச்சியாகும். விலங்கினங்களிலும் இது காணப் படுகிறது. "தனி மனிதன் தன்னால் வெற்றி கொள்ள முடியாத ஆபத்தான ஒரு நிலை ஏற்படும் போது அவனுக்கு அச்சம் ஏற்படுகிறது.ஒரு குறிப்பிட்ட நிலை உண்மையிலேயே அச்சத்தை உண்டாக்குவதாக இல்லா விட்டாலும் கூட அது ஆபத்தானது என்று தனி மனிதன் எண்ணினாலும் அவனிடம் அச்சம் தோன்றும்.தீவிரமான அச்சம் ஏற்படின் அது திகில் கவலை இனம் புரியாத பதட்டம் போன்ற பல்வேறு

மெய்ப்பாடுகளாக வெளியிடப்படுகிறது”[7]. என்று அச்சம் குறித்து விளக்கமளிப்பர்.

கோவலன் கொலையுண்ட செய்தியை ஆய்மகள் கூறவந்த நிலையில் கண்ணகி ஏதோ நிகழ்ந்துள்ளது என்று எண்ணி அச்சம் கொள்கிறாள்.அப்பெண்ணிடம் அச்சத்தோடு அவள் வினவுவதனை,

”எல்லா ! ஓ!
காதலற் காண்கிலேன் கலங்கிநோய் கைம்மிகும்
ஊதுலை தோற்க உயிர்க்குமென் நெஞ்சன்றே
ஊதுலை தோற்க உயிர்க்குமென் நெஞ்சாயின்
ஏதிலார் சொன்னது எவன்? வாழியோ தோழீ !
நன்பகற் போதே நடுக்குநோய் கைம்மிகும்
அன்பனைக் காணாது அலவுமென் நெஞ்சன்றே”

(துன்பமாலை 11-17)

என்ற அடிகள் கண்ணகியின் அச்சவுணர்வை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

**சினம்**

சினம் என்ற மனவெழுச்சியானது மனதில் எழுந்து மெய்ப்பாடாக வெளியே தோன்றுகிறது. க்ரியாவின் தற்கால அகராதி சினம் என்பதற்கு “கோபம், அநீதி, கொடுமை, அவமதிப்பு, இயலாமை முதலியவற்றுக்கு உள்ளாகும் போது ஒருவனுடைய முகத்திலோ செயலிலோ வெளிப்படும் மெய்ப்பாடு”8 என விளக்கம் தருகிறது.

“ஒருவன் தவறு செய்யும் போது கண்டிப்பது சாதாரண மன உணர்வு.ஆனால் அதுவே தீவிரமடைந்து கோபம் சினம் என்ற உணர்வுகளாக உச்ச கட்டத்தை அடைந்து மனவெழுச்சியாக மாறுகிறது”[9] என்பர்.

ஒருவனுடைய செயல்கள் தடுக்கப்பட்டால் அவன் சினம் கொள்வது இயற்கை.சமூகத் தொடர்பினால் ஏற்படும் தடங்கல்கள் குறுக்கீடுகள் இவைகளால் மனிதன் சினம் அடைகின்றான்.சினம் கொள்வது புறக்காரணிகளை (External factors) மட்டுமின்றித் தனி மனிதனின் மனப்பாங்கினையும் (Temperament) பொறுத்தது.ஒருவனைச் சினம் கொள்ளச் செய்யும் தூண்டல் மற்றொருவனைச் சிறிதும் பாதிப்பதில்லை.

தனக்கு எதிராகவோ அல்லது தான் விரும்பாத செயல் ஏதேனும் ஏற்படும் போது உண்டாகக் கூடிய மனவெழுச்சியானது சினமாக வெளிப்படுகின்றது. கோவலன் கள்வன் என்று குற்றம் சாட்டப்பட்டு கொலைசெய்யப் பட்டதை அறிந்த கண்ணகி கோபம் கொள்கிறாள்.அரண்மனைக்குச் சென்று தன் கணவன் குற்றம் அற்றவன் என்பதனை உறுதிப்படுத்துகிறாள். தான் தவறு செய்ததை அறிந்த மன்னன் தன் உயிர் துறக்கின்றான்.ஆயினும் சினம் அடங்காமல் கண்ணகி மதுரையை அழிக்க எண்ணுகிறாள்.

”பட்டாங்கு யானும் ஓர் பத்தினியே ஆமாகில்
ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையும் என்
பட்டிமையும் காண்குறுவாய் நீ”

(வஞ்சின மாலை 36-38)

என்ற அடிகள் கண்ணகியின் சினத்தினை வெளிக்காட்டு கின்றன.

**அன்பு**

அச்சம் சினம் ஆகிய மனவெழுச்சிகளைப் போலன்றி அன்பு என்னும் மனவெழுச்சி ஆக்கம் தருகின்ற மனவெழுச்சியாகும். தன் மனம் விரும்பிய செயல் நிகழ்வதால் உண்டாகும் மனவெழுச்சியே மகிழ்ச்சி ஆகும். “மனவெழுச்சி காரணிகளுள் மகிழ்ச்சி என்பது காமம், அன்பு, ஆசை இவைகளின் அடிப்படையிலான மெய்ப்பாடு ஆகும்”[10] என்று வாட்சன் என்னும் உளவியல் அறிஞர் குறிப்பிடுகின்றார். கோவலனைப் பிரிந்து துன்புற்ற நிலை மாறி, மாதரியின் இல்லத்தில் கோவலன், கண்ணகி

அடைக்கலமாகத் தங்கும் சூழ்நிலையில் கண்ணகி மகிழ்ச்சி உடையவளாகத் திகழ்கின்றாள்.

"கடிமல ரங்கையிற் காதலனடிநீர்
சுடுமண் மண்டையில் தொழுதனள் மாற்றி
மண்ணக மடந்தையை மயக்கொழிப் பினள்போல்
தண்ணீர் தெளித்துத் தன்கையால் தடவிக்
குமரி வாழையின் குருத்தகம் விரித்து ஈங்கு
அமுதம் உண்க அடிகள் ! ஈங்கு"

(கொலைகளக் காதை 38-43)

இவ்வடிகளின் வாயிலாகக் கண்ணகி கோவலனுக்கு விருப்பத்தோடும், மகிழ்ச்சியாகவும் உணவு சமைத்துப் பரிமாறியமையை அறிய முடிகிறது.

இவ்வடிப்படை மனவுணர்ச்சிகளின் கட்டுமானத் தில் அகமுகத்தவர்க்கென்று இருக்கக் கூடிய இரக்கம், கூச்சம், பொறுமை, ஏக்கம் ஆகியவற்றையும் கண்ணகியிடத்துக் காணமுடிகிறது.

**இரக்கம்**

இரக்கம் என்பது பிறரது நிலையைக் கண்டு மனதில் ஏற்படக் கூடிய ஒரு உணர்ச்சி மாற்றம் ஆகும். கண்ணகி ஆளுமைப் பண்பில் பிறரது நலனில் அக்கறை கொண்டவளாகத் திகழ்கிறாள்.வம்பப் பரத்தையர் தம்மை எள்ளி நகையாடக் கூடிய நிலையில் கவுந்தி வழங்கிய சாபத்தை நீங்கும் பொருட்டு கண்ணகி அவர்கள் மீது இரக்கம் கொண்டமையை,

"குறுநரி நெடுங்குரற் கூவிளி கேட்டு
நறுமலர்க் கோதையும் நம்பியும் நடுங்கி
நெறியின் நீங்கியோர் நீரல கூறினும்
அறியா மையென்றறியல் வேண்டும்
செய்தவத் தீர்நுந் திருமுன் பிழைத்தோர்க்கு
உய்தீக் காலம் உரையீ ரோவென"

(நாடுகாண் காதை 235-240)

என்ற அடிகள் விளக்குகின்றன. பிறருக்கு எந்தவித இடையூறு ஏற்படக் கூடாது என்ற இரக்க குணம் பெற்றவளாகக் கண்ணகி திகழ்ந்ததை இதன்வழி அறிய முடிகின்றது.

**கூச்சம்**

அகமுகத்தன்மை உடையவர்கள் பெரும்பாலும் கூச்ச சுபாவம் உடையவராகத் திகழ்வார்கள் என்பது யுங் அவர்களின் கருத்து. கண்ணகி மனையறம்படுத்தகாதையில் கோவலன் பல புகழ்மொழிகளைக் கூறியபோது நாணம் அடைகிறாள். மேலும் சாலினி என்ற பெண் தெய்வமேறப் பெற்று கண்ணகியின் பண்புநலன்களைப் பலவாறு பாராட்டுகின்றாள்.

“இவளோ கொங்கச் செல்வி குடமலையாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்த தவக் கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற்கோங்கிய
திருமா மணியெனத் தெய்வமுற்றுரைப்பப்”

(வேட்டுவ வரி 47-50)

எனப் புகழ்ந்து கூறுகிறாள். இதனைக் கேட்ட கண்ணகி நாணுகிறாள். நாணம் என்பததனை பெண்களுக்கு உரிய இயல்பாக தொல்காப்பியர் வரையறுத்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

”அச்சமும் நாணும் மடனுமுந் துறுத்த
நிச்சமும் பெண்பாற்குரிய என்ப”

இந்நூற்பா வழி தலைவியின் இலக்கணத்தை அறிய முடிகின்றது. கண்ணகி இயல்பாகவே நாணமுடையவள். மேலும் சாலினி கூறிய புகழ்மொழியினைக் கேட்டு மேலும் நாணமடைகிறாள் என்பதை,

“பேதுறவு மொழிந்தனள் மூதுறவு ஆட்டி என்று
அரும் பெறல் கணவன் பெரும்புறத்து ஒடுங்கி
விருந்தின் மூரல் அரும்பினள் நிற்ப”

( வேட்டுவ வரி 51-53 )

என்ற அடிகளால் அறியமுடிகிறது. கண்ணகி தன் மனதில் தோன்றிய நாணத்தின் காரணமாகவே அவ்வாறு குறிப்பிட்டமையை அறியலாகின்றது.

**அனிமஸ்**

அனிமஸ் என்பது பெண்ணின் நனவிலியில் மறைத்து உறையும் ஆணின் குணங்கள் ஆகும். பெண்ணின் நனவிலியில் மறைத்திருக்கும் ஆண்தன்மை சமுதாயப் பண்பாட்டுக் கட்டுப்பாடுகளால் மேலும் அமுக்கப்படும் போது, சமூகத்தின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப அவளது பெண்மைப் பண்புகள் மட்டும் ஆக்க நிலையுறுத்தம் (Conditioning) பெறுகின்றன.

**அனிமஸ் குணங்கள்**

உயிரிகளிடம் காணப்படும் இருபாலினத் தன்மைக்கு (Androgyny) யுங்கு பின்வரும் விளக்கத்தினைக் கொடுத்துள்ளார். ஆண்களிடம் அமைந்துள்ள பெண்மைப் பண்புகளை யுங்கு அனிமா (Anima) என்றும் பெண்களிடம் அமைந்துள்ள ஆண்மைப்பண்புகளை அனிமஸ் (Animus) என்றும் குறிப்பிட்டார்.

“பெண்ணில் மறைந்திருக்கும் ஆண்மைக் குணங்கள் பெண்மையின் குணங்களாகச் சமன் செய்து அவளது தன்முனைப்புடன் ஒருங்கிணைவு பெற்று இயல்பு நிலையில் வெளிப்படும் போது சுதந்திரமான சிந்தனை உடைய தன்னம்பிக்கை கொண்ட பெண்ணாக மாறுகிறாள். சிக்கல்களுக்குத் தானே தீர்வு காண்பவளாகவும், சிக்கலைக் கண்டு மனம் குலைந்து விடாமல் உளச்சமநிலையுடன் சிக்கலை அணுகுபவ ளாகவும் மாறுகிறாள். இலக்கு நோக்கிய நடத்தை உடையவளாக, வாழ்க்கையின் குறிக்கோளை உணர்ந்தவளாக உளஉறுதியுடன் குறிக்கோளை அடைய முயற்சிப்பவளாகவும் இருப்பாள்”[11]. இவை யாவும் பெண்களிடம் காணப்படக்கூடிய ஆண்தன்மைக்குரிய பண்புகளாகும்.

-----------------------------------------------------------------------------------------------------

கண்ணகி காப்பியத் தொடக்கத்தில் பெண்மைத் தன்மை மிகுதியும் உடையவளாகக் காணப்படுகிறாள். ஆயினும் கணவனுக்கு ஏற்பட்ட அவப்பெயரினை நீக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டினை அவள் மேற்கொள்ளும் போது அவளது அனிமஸ் குணம் வெளிப்படுவதனைக் காணமுடிகிறது.

நாடுகாண்காதையில்,

"முதிராக் கிளவியின் முள்ளயிறு இலங்க
மதுரை மூதூர் யாது?"

என்று ஏதுமறியாது வினாத் தொடுத்த கண்ணகி பாண்டிய மன்னின் அரசவை சென்று மன்னனோடு வாதாடுவது அவளது அனிமஸ் குணத்தின் வெளிப்பாடே எனலாம்.

"தேரா மன்னா செப்புவ துடையேன்
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநாநடுங்க"

(வழக்கு.கா.50-56)

என்ற அடிகள் மூலமாக மன்னனையே ஆராய்ந்து பார்க்கும் திறன் அற்றவனாகக் குறிப்பிடும் மனோதிட்பத்தைக் காணமுடிகிறது.

கண்ணகி அடிப்படைமனவெழுச்சிகளின் மிகுதியில் இரக்கம், பொறுமை ஆகிய பண்பு நலன்கள் கொண்டவளாக அமைகின்றாள்.இருப்பினும் அவளது நனவிலி மனதில் இருந்த அனிமஸ் பண்புகளும் தேவையான நேரத்தில் வெளிப்படுவதனைக் காணமுடிகிறது.

**சான்றெண்விளக்கம்**

1. க்ரியாவின் தற்காலத்தமிழ் அகராதி.ப.121
2. நர்மதாவின் தமிழ் அகராதி.ப.86

3. வர்த்தமானன் தமிழ் அகராதி ப.696.
4. முனைவர்.பெ.வெங்கட்டம்மாள்,பொது உளவியல், ப.129
5. வாழ்வியற் களஞ்சியம்.தொகுதி 2.ப-2
6. கழக வெளியீடு உளநலவியல் ப-26
7. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி 5.ப-404
8. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி. ப.516
9. இரா.ப.சக்தி சங்க அகஇலக்கிய மாந்தர்களின் உளவியல் ப.49
10. தா.ஏ.சண்முகம், உளவியல் 2ம் பாகம் ப.88.
11. இரா.காஞ்சனா.ஆளுமை வளர்ச்சியும் ஆளுமைக் கோட்பாடுகளும்-ப.49

## சிலப்பதிகாரத்தில் கற்பு மூலப்படிவம்

இயற்கையின் படைப்புகளில் மிகவும் சிக்கலான ஒன்று மனிதமனம். மனிதனின் எண்ணங்கள் செயல்பாடுகள் இவற்றிற்கான உண்மையான காரணங்களை வரைறுப்பது என்பது கடினமான ஒன்றாகும். எந்த ஒரு தனிப்பட்ட மனிதனின் செயல்பாடுகளுக்குப் பின்னரும் அவனது சூழலும் சமூகமும் ஆழ்மனமும் இன்றியமையாத இடம்வகிக்கும். அதன் அடிப்படையிலேயே இலக்கியப் படைப்புகளில் குறிப்பிட்ட சில கருத்துருவாக்கங்கள் ஒரே அடிப்படையில் மீண்டும் மீண்டும் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.சிலப்பதிகாரக் காப்பியத்தில் கற்பு என்னும் மூலப்படிவம் பதிவு செய்யப்பட்டுள்ள தன்மையினை இக்கட்டுரை ஆராய்கிறது.

**கூட்டுநனவிலிமனம்**

கூட்டுநனவிலி மனம் என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர் யுங் ஆவார். யுங் மனித ஆளுமையை நனவு ஈகோ (Conscious Ego) தனியர் ஈகோ (Personal Ego) கூட்டுநனவிலி (Collective or Transpersonal Unconscious) என்று மூன்று கோணங்களில் விவரித்துள்ளார்.

நனவிலி மனதிலிருந்து வேறுபட்டது கூட்டுநனவிலி மனமாகும். தனிமனித நனவிலி மன எண்ணங்கள் என்பவை அவனது நனவுமன எண்ணங்களே ஆகும். இவ்வெண்ணங்கள் காலப்போக்கில் நனவிலிமன எண்ணங்களாக மாறுகின்றன. மேலும் இவை பரம்பரை பரம்பரையாக மனித ஜீன்களின் வழியாகக் கடத்தப்பட்டு கால எல்லை வேறுபாடுகளைக் கடந்து தங்களைத் தாங்களே வெளிப்படுத்தும் ஆற்றல் கொண்டவையாக விளங்குகின்றன என்பது யுங்கின் கருத்து. இத்தகைய எண்ணங்களைக் கடத்துகின்ற மனப்பகுதியே கூட்டுநனவிலி மனமாகும். இந்தக் கூட்டுநனவிலி மனம் உலகப் பொதுமை வாய்ந்தது. இக்கூட்டு நனவிலி

மனதிற்குள் இருக்கும் எண்ணங்களும் உலகப் பொதுமை (Universalization) வாய்ந்தவை. இது நனவு நிலையால் எந்த வகையிலும் உணரமுடியாத இருண்ட பகுதியாக இருக்கக் கூடியதாகும். இந்தப் பகுதியை உள ஆற்றலின் தேக்கியாக யுங் கண்டறிந்தார். அந்த ஆற்றல் பல கூறுகளாகக் கூட்டுநனவிலியில் பொதிந்து கிடக்கின்றன. இவற்றையே யுங் மூலப்படிவங்கள் என்று குறிப்பிட்டார்.

**மூலப்படிவங்கள்**

தொன்மைக்காலம் தொட்டு மனித இன உள் அனுபவங்களால் பெற்றமைந்த அமைப்பியல் உளக் கூறுகளே மூலப்படிவங்கள் எனலாம். இவை கருத்துருக்களாக அமைந்து அனைவரின் நனவிலிக்குள்ளே பொதுநிலையில் உள்உணர்ச்சி போல் மனதிற்குள் செயல்படுபவை ஆகும். மறுபுறம் இவை தனியரற்ற நிலையிலும் (Impersonal) விளங்குகின்றன. யுங் படைப்பு ஆளுமை என்பது தனியரற்ற நிலையுடன் தொடர்புடையது என்று குறிப்பிடுகிறார். அதாவது ஒவ்வொரு படைப்பும் கூட்டுப்படைப்பு (Collective creation) என்பது அவரது வாதம்.

தாய், அனிமா, அனிமஸ், முதல் தந்தை, சாயல், தெய்வீகக் குழந்தை, அச்சுறுத்தும் தாய், ஞான முதியவன், ஏமாற்றுக்காரன் அல்லது குறும்புக்காரன், சுயம், மண்டலம், நாயகன் இவை அனைத்தும் இடவேறுபாடு இனறிக் காணப்படும் மூலப்படிவங்கள் ஆகும் என்று யுங் குறிப்பிடுகிறார்.

**மூலப்படிவங்களின் இயல்புகள்**

மூலப்படிவங்களின் முதன்மையான இயல்பு திருப்பம் ஆகும் . சமய சந்தர்ப்பம் கிடைத்தவுடன் இவை உடனுக்குடன் வெளிப்படுபவை. குறிப்பாகக் கனவிலும் புனைவிலும் இவை எளிதாக வெளிப்பட்டு விடும். மனிதனின் முதல் இலக்கியம் முதல் இந்நாள் உள்ள இலக்கியங்கள் வரையிலும் இவை தம்மை வெளிப்படுத்திக் கொள்ளாமல் இருந்தது இல்லை. செவ்வியல் இலக்கியம், நாட்டுப்புற இலக்கியம், நவீன இலக்கியம் என்று

எந்த வகையான இலக்கியமாக இருந்தாலும் இலக்கிய வடிவங்களுக்கு ஏற்ப மூலப்படிவங்கள் அவற்றுள் தம்மைக் கட்டமைத்துக் கொள்கின்றன. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளும் கற்பு பற்றி குறிப்பிடடுள்ள கருத்துகள் கூட்டுநனவிலி மனதின் வெளிப்பாடே எனலாம்.

**கற்புமூலப்படிமம்**

கற்பு என்ற மூலப்படிமத்தினை நாம் சங்க காலம் தொடங்கி இன்று வரையுள்ள இலக்கியங்கள் வரையிலும் காணஇயலுகின்றது. சிலம்பில் கண்ணகி, கோப்பெருந்தேவி என்ற பாத்திரங்களோடு நின்று விடாமல் வஞ்சின மாலையில் இடம் பெறும் பத்தினிப் பெண்டிர் தொடர்பான கதைகளும் கற்பு மூலப்படிவத்திற்கும் கூட்டுநனவிலிக்கும் சான்றாக அமைகின்றன.

**கற்பு – விளக்கம்**

கற்பு என்ற சொல் இலக்கியங்களில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

“கற்பு என்ற சொல்லிற்கு ‘chastity’,‘conjugal’, ‘fidelity’ ஆகிய பொருட்கள் தரப்பட்டுள்ளன. ‘Chastity’ என்பதற்குக் கன்னிமை, தூய்மை, தற்கட்டுப்பாடு என்ற பொருட்கள் தரப்படுகின்றன. ‘Conjugal’, ‘fidelity’ என்ற சொற்களுக்கு, மணவாழ்வில் கணவன் – மனைவி இருவரிடத்தும் ஏற்படும் பற்று, மாறா உறுதிப்பாடு என்ற பொருள் தரப்படுகிறது. அதாவது கணவன் மனைவியிடத்தும், மனைவி கணவனிடத்தும் பற்று மாறாமல் இருக்கும் தன்மை” (இரா. பிரேமா கற்பு – கலாச்சாரம் பக் – 7-8) என்று குறிப்பிடுவர்.

**இலக்கியங்களில் கற்பு என்ற சொல்லாட்சி**

அகநானூற்றில் கற்பு என்ற சொல்லாட்சி, பயிற்சி என்ற பொருளில் வழங்கப்பட்டுள்ளது.

**இகல்அடு கற்பின் மிஞிலியொடு தாக்கி**

(அகம் 396 – 5)

என்ற பாடலடியில் தான் சொல்லிய சொல் பிழையாது போர் வெல்லும் பயிற்சியுடைய மிஞிலி என்றும்,

**வெளிறு இல் கற்பின் மண்டு அமர் அடுதொறும்**

(அகம் 106 – 11)

என்ற பாடலடியில் குற்றம் இல்லாத படைப்பயிற்சியுடன் கூடிப் போர் செய்தல் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளமையை அறியலாகின்றது.

பதிற்றுப்பத்தில் கற்பு என்னும் சொல் கற்றல் என்னும் பொருளில் ஒரு இடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**உலகந்தாங்கியமேம்படுகற்பின்**
**வில்லோர் மெய்ம்மறை** (பதி 59-8 – 9)

என்ற அடியில் கற்க வேண்டியவற்றைக் கற்றவன் என்னும் பொருள்பட கற்பு என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளமையை அறியலாகின்றது. இருப்பினும் கற்பு என்ற சொல் பெண்ணோடு தொடர்பு படுத்தப்பட்டு பெண்ணுக்குரிய பண்புகளில் ஒன்றாக சுட்டப்படுவதனை

**முல்லைசான்றகற்பின்**
**மெல் இயற் குறுமகள் உறைவின் ஊரே**

(நற் 142 9-10 )

**நாணொடு மிடைந்த கற்பின் வாள் நுதல்**

(அகம் 9- 24 )

**மனைமாண் கற்பின் வாணுதல்** ஒழிய

(அகம் 33 – 2 )

**திருநகர் அடங்கிய மாசுஇல் கற்பின்**

(அகம் -114 -12 )

**உவர் நீங்கு கற்பின் எம் உயிர் உடம் படுவி**

(அகம் 136 – 19)

**முல்லைசான்றகற்பின்**
**மெல்இயற் குறுமகள்**

(அகம் 274 13-14 )

என்ற அடிகளால் அறியலாகின்றது.சங்க இலக்கியங்கள் கணவன் இறந்த உடனேயே தானும் இறந்த பெண்கள் (புறம் 62, குறுந் 57 69) கணவனோடு உடன்கட்டை ஏறிய பெண்கள் (புறம், 240) ஆகியோரைச் சிறப்பிப்பதனைக் காணமுடிகிறது. வேறு சில கடமைகளுக்காக கணவனுக்குப் பின்னரும் உயிர் வாழும் பெண்கள் கைம்மை பூண்டு வாழ்ந்தமையையும் சங்க இலக்கியங்கள் (புறம் 125, 224, 237, 242, 246, 248, 249, 250, 253, 261, 272, 280, 326, 353) பதிவு செய்துள்ளன. இதன் வழி கற்பு என்பது சமூகத்தின் கூட்டுநனவிலியாக விளங்கியமையை அறியலாகின்றது. இதன் தொடர்ச்சியினைக் காப்பியங்களிலும் காணமுடிகிறது.

**காப்பியங்களில் கற்பு மூலப்படிவம்**

இளங்கோவடிகளின் கூட்டு நனவிலி மனத்திலும் இத்தகைய கற்பு பற்றிய மூலப்படிவங்கள் பதிந்து இருந்தமையாலே அவரது காப்பியத்தில் பெண் பாத்திரங்களைக் கற்புக்கு முதன்மை தரும் பாத்திரங்களாகப் படைத்துக் காட்டியுள்ளனர் எனலாம். சிலப்பதிகாரத்தில் மதுரைக் காண்டத்தில் வஞ்சின மாலையில் இடம் பெறும் பத்தினிப் பெண்டிரின்

கதைகள் கற்பு குறித்த கூட்டுநனவிலி கருத்துருவிற்குச் சிறந்த சான்றாக அமைகின்றன.

**பூம்புகார் நகரத்துக் கற்புடைய மகளிர்**

அஃறிணைப்பொருள்களான வன்னி மரத்தினையும் மடைப்பள்ளியையும் பேசச் செய்தல், கணவன் என்று கூறப்பட்டதால் மணலால் ஆன பாவையினை நீங்காது இருந்த பெண், காவேரியில் மூழ்கிய கணவனை மீட்ட ஆதிமந்தி, பொருளீட்டச் சென்ற கணவன் வரும் வரை கல்லுருவம் கொண்ட பெண், கிணற்றில் வீழ்ந்த மாற்றாளின் குழந்தையை மீட்ட பெண், கணவனைத் தவிர வேறு எவர்க்கும் அழகாகத் தெரியக் கூடாது எனத் தன் முகத்தைத் தானே குரங்காக மாற்றிக் கொண்ட பெண், தாயின் உறுதிமொழிக்காக ஆண்குழந்தையைக் கணவனாக ஏற்றுக் கொண்ட பெண் என்று பத்தினிப் பெண்களின் கதை கூறப்பட்டுள்ளது.

இவை வழி வழியாக வழங்கி வந்த, பெண் என்றால் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற கூட்டுநனவிலியின் வெளிப்பாடே எனலாம்.

**கண்ணகி**

கண்ணகி என்ற மூலப்படிவம் கணவன் எந்தத் தவறு செய்தாலும் எதிர்த்துப் பேசாத இல்லறக் கடமையினை மட்டுமே கருத்தில் கொண்டு தன் துயரை மறைத்து வாழும் கற்புடை பெண்ணிற்கான படிவமாகும். கணவன் எத்தகைய துன்பத்தைத் தந்தவனாக இருப்பினும் அவனுக்குப் பழி ஏற்பட்டால் அப்பழியில் இருந்து கணவனைக் காப்பதே கற்புடைய பெண்ணின் கடமை . அவ்வாறு இருந்தால் அவள் உலகோர் புகழும் சிறப்பினை அடைவாள் என்பதும் இதன் வழி மகளிர்க்குப் புலப்படுத்தப் படுகிறது எனலாம். சங்க காலத்திலும் பேகன் என்னும் மன்னன் தன் மனைவி கண்ணகியைப் பிரிந்த நிலையிலும் அவள் கணவனுக்காகவே வாழ்ந்த நிலை பதிவு செய்யப்பட்டுள்ளது இங்கு சுட்டத்தக்கது.

தேவந்தி மற்றும் மணிமேகலையில் இடம்பெறும் ஆதிரை பாத்திரங்களும் இவ்வகையில் படைக்கப் பட்டனவே எனலாம்.

**கோப்பெருந்தேவி**

அரண்மனை வாழ்வு பெருஞ்செல்வம் அனைத்தும் இருப்பினும் கணவன் உயிர் இழந்த பின் உயிர் வாழ்தல் கற்புடைய மகளிர்க்கு அழகன்று என்பதனைப் புலப்படுத்துவதான மூலப்படிவம். சங்க காலத்திலும் கணவன் இறந்த பின்னர் மகளிர் உயிர் துறந்தமை குறிப்பிடப்படுவது இங்கு சுட்டத்தக்கது.

**மாதவி**

ஒருத்திக்கு ஒருவன் என்ற நிலையில் பரத்தை குலத்தைச் சார்ந்தவராக இருப்பினும் ஒருவரோடு ஒருவர் என்று வாழ்வதனை வெளிப்படுத்தும் கற்பு என்னும் மூலப்படிவம்.

கற்பு என்ற மூலப்படிவம் அரசநிலையில் இருக்கும் கோப்பெருந்தேவி அரசர்க்கு அடுத்த நிலையில் இருக்கும் வணிக குலத்தைச் சார்ந்த கண்ணகி என்ற இரு பாத்திரங்களிலும் தன்னை வெளிப்படுத்துவதனைக் காணமுடிகிறது. இவ்விரு பாத்திரங்களையும் தாண்டி பரத்தை குலத்தைச் சார்ந்த மாதவியின் பாத்திரத்திலும் வெளிப்படுவதனைக் காணலாகின்றது.

**துணைநூற்பட்டியல்**


- இரவிச்சந்திரன் தி.கு, சிக்மண்ட் ஃப்ராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல், அலைகள் வெளியீட்டகம்,சென்னை 2005.
- ------------------------, ஃப்ராய்ட் யூங் லக்கான்: அறிமுகமும், நெறிமுகமும், அடையாளம் பதிப்பகம், புத்தாநத்தம் 2007.
- இரவிச்சந்திரன் தி.கு, புதுமைப்பித்தன் கனவும் உளப்பகுப்பு ஆய்வும் (ஃப்ராய்ட்: யூங்: லக்கான்), அலைகள் வெளியீட்டகம், சென்னை 2017.

- நடராசன் தி.சு, திறனாய்வுக் கலை கொள்கைகளும் அணுகுமுறைகளும், நியுசெஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட், சென்னை 2016 10வது பதிப்பு.
- பிரேமா இரா கற்பு – கலாச்சாரம் தமிழ்ப்புத்தகாலயம் சென்னை 2006.

## காஞ்சனனின் ஆளுமை

மணிமேகலைக் காப்பியத்தில் இடம்பெறும் காஞ்சனன் பாத்திரம் துணைமைப்பாத்திரமாக அமைந்தாலும் காப்பியத்தின் வளர்ச்சிக்கு உதவக் கூடிய பாத்திரமாக அமைகிறது. காஞ்சனன் பிறருடன் கலந்து பழகாத இயல்பினைக் கொண்டவனாக அமைகின்றான். அப்பாத்திரத்தின் இவ்ஆளுமையே காப்பியத்தில் இன்றியமையாத இடம் வகிக்கின்றது.காஞ்சனனின் ஆளுமையை இக்கட்டுரை ஆராய்கிறது.

### காஞ்சனனின் ஆளுமை மாற்றம்

மணிமேகலையில் இடம்பெறும் காஞ்சனனின் ஆளுமை மாற்றத்தினை நடத்தைக் கோட்பாடு வழி ஆராய இயலுகின்றது. மனிதனின் வெளிப்படையான நடத்தையை மட்டுமே ஆராய்ந்து அவனுடைய ஆளுமையை அறியலாம் என்பதே நடத்தைக் கொள்கையாகும். "மனித நடத்தை, இயக்க நடத்தை, குரல் நாண்களின் அசைவுகள், உள் உறுப்புகளின் இயக்கத்தினின்று எழும் நடத்தைகள் என மூன்று வகைப்படுத்தப் படுகிறது. தூண்டல் – துலங்கல் தொடர்புகளாக ஏற்படும் மறிவினைகளே நடத்தையின் அடிப்படை ஆகும். தனிமனிதனின் சமூகச் செயல்களில் மிகுந்த அளவில் சிதைவினை ஏற்படுத்தும் நடத்தைக் கூறுகள் ஆளுமைக் கோளாறுகள் என்று கருதப்படுகின்றன"[1] என்பர். காஞ்சனன் பாத்திரத்தில் இத்தகைய ஆளுமைக் கோளாறுகள் ஏற்படுவதனைக் காணமுடிகிறது.

### ஆளுமைக் கோளாறு

பண்டைக் காலங்களில் ஆளுமைக் கோளாறு உடையவர்கள் குற்றவாளிகளாகவோ, நிலை தடுமாறி நடப்பவர்களாகவோ கருதப்பட்டனர். தனிமனிதனின் ஆளுமைக் கூறுகள், குழந்தைப் பருவத்திலிருந்தே அவன் பழக்கவழக்கங்களுடன் ஒன்றி வருபவையாகும். ஆனால் தனிமனிதனின் ஆளுமைக் கோளாறுகளுள் பல, அவனுடைய சமூகப் பொருத்தப்பாட்டிற்கு இடையூறு விளைவிப்பனவாக விளங்குகின்றன. இக்கோளாறுகளை

உடையவர்கள், பெரும்பாலும் தொல்லைக்கு உள்ளாவதில்லை. இவர்கள் தம்மை இயல்பு நடத்தையினராக எண்ணுகின்றனர். ஆளுமைக் கோளாறுகளில் முதன்மையானவை,

“1. கருத்துத்திரிபு ஆளுமை
2. உளச்சிதைவு ஆளுமை
3. தவிர்ப்பு ஆளுமை
4. வரம்பு ஆளுமை
5. நடிப்பு ஆளுமை
6. தன் வழிபாட்டு ஆளுமை
7. சார்புநிலை ஆளுமை
8. கட்டாய ஆளுமை
9. பணிவு – தாக்குதல் ஆளுமை”[2]

ஆகியவை ஆகும்.இத்தகைய ஆளுமைக் கோளாறினை காஞ்சனனிடம் காணலாகின்றது.

**உளச்சிதைவு ஆளுமை**

காஞ்சனன் தன்மனைவியுடன் வாழ்ந்த நிலையில் பிறருடன் பயன் பெறத் தக்க வகையில் எந்தவிதமான நட்புறவையும் ஏற்படுத்தாமல் வாழ்ந்தான் எனக் கருத இடம் உள்ளது. இத்தகையோரை உளச்சிதைவு ஆளுமையினர் என்பர். “இவர்கள் தனிமையை விரும்புவர். மற்றவரிடமிருந்து ஒதுங்கியிருப்பர். இவர்கள் பயனுள்ள சமூக உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள முடியாதவர்”[3] என்று குறிப்பிடுவர். காஞ்சனன் தன் மனைவி காயசண்டிகையோடு பொதிகை மலையின் வளம் காணும் பொருட்டு செல்கின்றான். அம்மலையில் விருச்சிகனென்னும் முனிவர் தவவாழ்வு மேற்கொண்டு வாழ்ந்து வருகிறார். காயசண்டிகை விருச்சிகமுனிவனின் உணவினை காலால் மிதித்து சேதப்படுத்தி விடுகிறாள். அதனால் அவள் முனிவரின் சாபத்திற்கு ஆளாகிறாள்.

“பன்னீ ராண்டில் ஒருநா ளல்லது
உண்ணா நோன்பினேன் உண்கனி சிதைத்தாய்
அந்தரஞ் செல்லும் மந்திரம் இழந்து
தந்தித் தீயால் தனித்துயர் உழந்து
முந்நா லாண்டின் முதிர்கனி நானீங்கு
உண்ணு நாளுன்உறுபசி களைகென
அந்நா ளாங்கவன் இட்டசாபம்
இந்நாள் போலும் இளங்கொடி கெடுத்தனை”

**(மணி., உலகவறவி புக்க காதை: 41-48)**

என்ற அடிகள் மூலமாக இதனை அறிய முடிகின்றது.

காஞ்சனனின் மனைவி முனிவனின் சாபத்தினால் யானைத் தீ பசியால் வாடுகின்றாள். ஆனால் காஞ்சனனோ தன் மனைவி செய்த தவறால் வருந்தி முனிவரிடம் மன்னிப்பு கேட்கவும் இல்லை, அவளை சாபத்திலிருந்து விடுவிக்குமாறு வேண்டவும் இல்லை. மாறாக தன் மனைவியுடன் அம்மலையிலிருந்து வெளியேறி காயசண்டிகையை காவிரிப்பூம்பட்டினத்திற்குச் செல்லுமாறு கூறி விட்டு விண்ணுலகம் சென்று விடுகிறான். அவன் மனைவிக்குத் துணையிருக்கவும் இல்லை. உரிமை உடைய மனைவியிடமே இத்தகைய தன்மை கொண்ட காஞ்சனன் சமூகத்தில் சுமூக உறவு மேற்கொள்ள இயலாத தன்மை உடையவன் எனச் சுட்ட இடமுள்ளது எனலாம்.

**தவிர்ப்பு ஆளுமை**

காயசண்டிகை உருவில் திகழ்ந்த மணிமேகலை தன்னை மதிக்காமல் இருந்ததை எண்ணி காஞ்சனன் தான் வெறுக்கப் படுவதாக உணர்கிறான். அந்த அவமானத்தை ஏற்கமுடியாதவனாகத் தன்னுடைய கோபத்தை உதயகுமரன் மீது காட்டக் கூடிய தவிர்ப்பு ஆளுமையினனாக மாற்றம் அடைகிறான். “தவிர்ப்பு ஆளுமையினர் மற்றவர்களால் வெறுக்கப்படுவதையோ அவமானப்படுத்தப் படுவதையோ பொறுத்துக்

கொள்ள முடியாதவர்கள்"[4] என்று குறிப்பிடுவர். காஞ்சனன் தவிர்ப்பு ஆளுமை உடையவனாகத் திகழ்வதனை,

"தற்பா ராட்டுமென் சொற்பயன் கொள்ளாள்
பிறன்பின் செல்லும் பிறன்போ னோக்கும்
மதுக்கம ழலங்கன் மன்னவன் மகற்கு
முதுக்குறை முதுமொழி எடுத்துக் காட்டிப்
பவளக் கடிகையிற் றவளவாள் நகையுங்
குவளைச் செங்கணுங் குறிப்பொடு வழாஅள்

**(மணி., உதயகுமரனை வாளாலெறிந்த காதை: 71-75)**

என்ற அடிகள் வழி அறிய முடிகின்றது. காஞ்சனன் மணிமேகலையின் உருமாற்றத்தை அறியாமல் தன் மனைவி காயசண்டிகை என ஆவலுடன் பேச முற்படுகின்றான். காயசண்டிகையின் உருவில் இருக்கும் மணிமேகலையோ காஞ்சனனின் பேச்சைக் கேட்காமல் தவிர்க்க முற்படுகிறாள். காஞ்சனன் காயசண்டிகையின் உருவில் இருக்கும் மணிமேகலையின் செயலால் சினம் கொள்கிறான்.

**தன்வழிபாட்டு ஆளுமை**

காஞ்சனன் தன்வழிபாட்டுஆளுமை உடையவனாகவும் விளங்குகிறான். அவன் காயசண்டிகை வடிவில் இருந்த மணிமேகலையின் மனஉணர்ச்சிகளையும், விருப்பு வெறுப்புகளையும் பற்றிக் கவலைப்படாமல் தான்கொண்ட நோக்கத்தினை நிறைவேற்ற வேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் விளங்கினான். "இத்தகைய ஆளுமையினர் தன்னைப் பற்றி மிக உயர்ந்த கருத்துக் கொண்டிருப்பர். தன்வழிபாட்டு ஆளுமையினர் எப்போதும் தன்வயப்பட்டவராகவும், மற்றவர்கள் தம்மை எப்போதும் புகழ வேண்டும் என்றும் விரும்புவர். மற்றவர்கள் தம்மைக் குறைகூறுவதையோ பொருட்படுத்தாமையையோ அணுவளவும் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். மற்றவர்களின் மனஉணர்ச்சி களையும், விருப்பு வெறுப்புகளையும் பற்றிக் கவலைப்படமாட்டார்கள்"[5] என்று குறிப்பிடுவர்.

காஞ்சனன் காயசண்டிகையைத் தேடி மூதூர் முழுவதும் அலைந்து இறுதியில் அவள் இருப்பிடம் அடைகின்றான். காயசண்டிகை தன் மனைவி என்ற உரிமையில் அவள் கையில் இருக்கக்கூய அமுதசுரபி பற்றி அறிந்து கொள்ள விரும்புகின்றான். இதனை,

“இன்றுநின் கையின் ஏந்திய பாத்திரம்
ஒன்றே யாயினும் உண்போர் பலரால்
ஆனைத் தீநோய் அரும்பசி களைய
வான வாழ்க்கையர் அருளினர் கொல்லெனப்
பழைமைக் கட்டுரை பலபா ராட்டவும்”

**(மணி., உதயகுமரனை வாளாலெறிந்த காதை: 33-37)**

என்ற அடிகள் வாயிலாக அறிய முடிகின்றது. காயசண்டிகை தன்னைப் பொருட்படுத்தாமல் இருப்பதைக் கண்ட காஞ்சனன் சினம் கொள்ளக் கூடியவனாக மாறிய நிலையை உணர முடிகின்றது.

**கருத்துத்திரிபு ஆளுமை**

உதயகுமரனுக்கு அஞ்சிய மணிமேகலை காயசண்டிகை வடிவில் இருக்கிறாள். காஞ்சனன் மணிமேகலையைக் காயசண்டிகை என்று எண்ணி அவளிடம் பேச முனைகிறான். மாற்றுருவில் இருக்கும் மணிமேகலையோ காஞ்சனனுக்கு மறுமொழி கூறாமல் உதயகுமரனிடம் உரையாடுகிறாள். அப்போது காஞ்சனன் தன் மனைவியின் மீது ஐயம் கொள்கிறான். இத்தகையவர்களை உளவியலார் கருத்துத்திரிபு ஆளுமையினர் என்பர். “கருத்துத் திரிபு ஆளுமையினரிடம் கருத்துத் திரிபு உளநோயாளிகளைப் போல் திரிபுணர்வுகளோ மனநோய் அறிகுறிகளோ காணப்படுவதில்லை. ஆனால் இவர்களிடம் பரவலான ஒரு சந்தேக மனப்பான்மையும் மற்றவரிடம் நம்பிக்கையின்மையும் அதிக அளவில் காணப்படும்”[6] என்பர். இத்தகைய கருத்துத்திரிபு ஆளுமையானது காஞ்சனனிடம் காணப்படுவதை,

“ஈங்கிவன் காதலன் ஆதலின் ஏந்திழை

ஈங்கொழிந் தனளென இகலெரி பொத்தி
மற்றவள் இருந்த மன்றப் பொதியினுள்
புற்றடங் கரவிற் புக்கொளித் தடங்கினன்
காஞ்சன னென்னுங் கதிர்வாள் விஞ்சையயன்"

**(மணி., உதயகுமரனை வாளாலெறிந்த காதை: 76-81)**

என்ற பாடல் அடிகள் மூலமாக அறிய முடிகிறது. காயசண்டிகை வடிவில் இருந்த மணிமேகலை தன்னைத் தவிர்த்து உதயகுமரனிடம் பேசியதால் காயசண்டிகை உதயகுமரன் மேல் காதல் உணர்வு கொண்டாள் என்ற சந்தேக மனப்பான்மை காஞ்சனனுக்கு உருவாகிறது என்பதை அறியலாம்.

**வரம்பு ஆளுமை**

காஞ்சனனின் மனநிலை வரம்பு ஆளுமைக் கொண்டு விளங்குகின்றது. அவன் நடத்தையானது சூழ்நிலைக்கு ஏற்ப மாறாக்கூடியதாகக் காணப்படுகின்றது. தன் மனைவியுடன் மாற்றான் ஒருவன் பேசுவதை விரும்பாத மனநிலைப் பெற்ற வரம்பு ஆளுமைப் பெற்றுத் திகழ்கிறான். "வரம்பு ஆளுமையினரிடம் நிலையிலா நடத்தைக் கோலங்களும் மனநிலை மாற்றங்களும் காணப்படும். சில சமயங்களில் மனம் தளர்ந்த நிலையினராக இருப்பர், மறுகணமே சினம் கொள்வர், இவர்கள் அடங்காச்சினம் கொள்வதும் உண்டு"[7] என்று குறிப்பிடுவர். காயசண்டிகை உருவில் இருக்கும் மணிமேகலையைக் காண உதயகுமரன் சம்பாபதிக் கோயிலுக்கு இரவு நேரத்தில் செல்கிறான். காயசண்டிகை மேல் உள்ள விருப்பத்தின் காரணமாகவே உதயகுமரன் தனியாக இரவுவேளையில் சம்பாபதிக் கோயிலுக்கு வந்துள்ளான் என்று காஞ்சனன்
எண்ணுகிறான். இதனை,

"ஆங்குமுன் னிருந்த அலர்தார் விஞ்சையன்
ஈங்கிவன் வந்தனன் இவள்பா லென்றே
வெஞ்சின அரவ நஞ்செயி றரும்பத்
தன்பெரு வெகுளியின் எழுந்துபை விரித்தென

இருந்தோன் எழுந்து பெரும்பின் சென்றவன்
சுரும்பறை மணித்தோள் துணிய வீசி”

**(மணி., உதயகுமரனை வாளாலெறிந்தகாதை: 102-107)**

என்ற அடிகள் வழி அறிய முடிகின்றது. காஞ்சனன் காயசண்டிகை தன்மேல் விருப்பம் இல்லாமல் இருப்பதைக் கண்டு முன்னரே சினம் கொண்டு இருந்தான். தற்பொழுது உதயகுமரன் காயசண்டிகையைக் காண வந்திருப்பதனை எண்ணி அவன் மீது கோபம் கொள்கிறான். வாளால் வெட்டி வீழ்த்தும் அளவிற்கு அவன் ஆளுமைத் திரிபு அடைந்தவனாக இருப்பதனைக் காணமுடிகிறது.

**நடிப்பு ஆளுமை**

காஞ்சனன் தன்னலம் மட்டுமே பெரிது என்ற எண்ணமுடையவனாகத் திகழ்ந்தான் எனலாம். காயசண்டிகை தன்னிடம் மட்டுமே அன்பு கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு கொண்டு இருந்தான். மாறாக அவள் உருவில் இருந்த மணிமேகலையோ உதயகுமரனிடம் பேசுகிறாள். காஞ்சனன் அதனைக் கூட ஏற்க இயலாமல் கோபம் அடைகிறான். “நடிப்பு ஆளுமையினர் மற்றவர்களை மிகையாகச் சார்ந்திருப்பார்கள். இவர்கள் மற்றவர்கள் துன்பங்களைப் பற்றிக் கவலை கொள்ளாதவர்கள். ஆனால் தன்னலம் மிக்கவர்களாக இருப்பர். எப்பொழுதும் மற்றவர்களின் கவனம் தம்மைச் சுற்றியே இருக்க வேண்டும் என்று விழைவர். அதற்கான வகைகளில் தம் நடத்தைகளை அவ்வப்போது மாற்றங்கள் செய்வர்”[8] என்று குறிப்பிடுவர். உதயகுமரனை வாளால் வெட்டி அவனை சாய்த்த பின்னரும் காயசண்டிகையை அழைத்துச் செல்வதில் மட்டுமே அவன் கவனம் இருந்த நிலையினை,

“காயசண் டிகையைக் கைக்கொண் டந்தரம்
போகுவ லென்றே அவள்பாற் புகுதலும்”

**(மணி., உதயகுமரனை வாளாலெறிந்த காதை: 108-109)**

என்ற அடிகள் வழி அறிய முடிகின்றது. சம்பாபதிக் கோயிலில் இரவுநேரத்தில் தன் மனைவி காயசண்டிகையை உதயகுமரன் காதல் கொண்டு அடைய வந்தான் என்று தவறாக எண்ணிக் கொலை செய்கிறான். உதயகுமரன் இறந்த நிலையில், அச்சூழல் குறித்துக் கவலை கொள்ளாமல் காயசண்டிகையை விண்ணுலகம் அழைத்துச் செல்ல வேண்டும் என்ற தன்னலத்தோடு கூடிய நடிப்பு ஆளுமை காஞ்சனனிடமிருப்பதை அறிய முடிகின்றது.

**தாககுதல் ஆளுமை**

காஞ்சனன் பிடிவாத குணம் உடையவனாகத் திகழ்கிறான். தன் மனைவி காயசண்டிகை தன்னை ஒதுக்குவதாகக் கருதும் நிலையில் தன் வெறுப்பினை உதயகுமரனின் மீது காட்டத் தொடங்குகின்றான். அந்நிலையில் அவனது பணிவு-தாக்குதல் ஆளுமை வெளிப்படுகின்றது. "மற்றவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்பப் பணிவெதிர்ப்பு நிலை வாயிலாகத் தம்முடைய தாக்குதல் மனப்பான்மையை உணர்த்துபவர் பணிவுதாக்குதல் ஆளுமையினர் எனப்படுகின்றனர். பிடிவாதம் உறுதியின்மை போன்றவைகளால் பணிவெதிர்ப்பினை இத்தகையோர் வெளிப்படுத்து கின்றனர். தமக்குக் கிடைக்க வேண்டியவை கிடைக்கப் பெறாமையால் சமூக எதிர்ப்பினை இவ்வாறு வெளிப்படுத்துவர் என்பர்"[9] காஞ்சனனும் தன்னுடைய பணிவுதாக்குதலை தன்னுடைய பிடிவாதகுணம் மூலமாக வெளிப்படுத்தி உள்ளதை,

"நெடுநிலைக் கந்தின் இடவயின் விளங்கக்
கடவு ளெழுதிய பாவையாங் குரைக்கும்
அணுகல் அணுகல் விஞ்சைக் காஞ்சன
மணிமே கலையவள் மறைந்துரு வெய்தினள்
காயசண் டிகைதன் கடும்பசி நீங்கி
வானம் போவுழி வந்தது கேளாய்"

**(மணி., உதயகுமரனை வாளாலெறிந்த காதை: 110-115)**

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. காஞ்சனன் யானைத்தீ பசியால் வாடிய காயசண்டிகையைக் கண்டு விண்ணுலகம் அழைத்துச் செல்ல வேண்டும் என்ற எண்ணமுடையவனாகப் பூவுலகிற்கு விரைகின்றான். சம்பாபதிக் கோயிலில் காயசண்டிகை வடிவில் இருந்தது மணிமேகலை என அறியாது அவளை விண்ணுலகம் அழைத்துச் செல்லத் துணிகிறான். காஞ்சனனின் இப்பிடிவாத குணத்தைக் கண்டு மணிமேகலா தெய்வம் காயசண்டிகையின் நிலை பற்றிக் கூறியதோடு, மணிமேகலையே காயசண்டிகை யாக உருமாறி உள்ளாள் என்பதையும் எடுத்துக்கூறி காஞ்சனனின் பிடிவாதமானப் போக்கைத் தடுக்கின்றது.

இவ்வாறு பல்வேறு ஆளுமைகளின் கூட்டாகக் காஞ்சனன் விளங்குவதனை இப்பாத்திரத்தினை நுட்பமாகப் படிப்போர் உணர்ந்து கொள்ள இயலும்.

**சான்றெண்விளக்கம்**

1. சு.சண்முகசுந்தரம், மு.நூ., ப.9.
2. பெ.தூரன், அடிமனம், ப.16.
3. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி 2, ப.723.
4. மேலது., ப.723.
5. மேலது., ப.723.
6. சந்திரமோகன், மு.நூ., ப. 151.
7. வாழ்வியற் களஞ்சியம் ,தொகுதி 2, ப.723.
8. மேலது., ப.723.
9. மேலது., ப.724.

## சிலம்பில் சங்க இலக்கியச் சுவடுகளும் சுவடுமாற்றங்களும்

மனித சமூகம் இனக்குழு வாழ்க்கை முறையில் இருந்து குடிமைச் சமூக நாகரிகத்தை (civic society) நோக்கி வளர்ந்த ஒரு வளர்ச்சிக் கட்டத்தை சங்ககாலம் என்று குறிப்பிடுவர்.இச்சங்க கால வாழ்க்கை முறைகளைச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. சங்கம் மருவிய கால இலக்கியமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள சிலப்பதிகாரத்தில் சங்க இலக்கியப் பதிவுகள் சில இடங்களில் அவ்வாறேயும் சில இடங்களில் மாற்றம் பெற்றும் காணப்படுகின்றன.

**திருமண நிகழ்வு**

திருமணம் என்பதனை “திருமணம் என்பது சமூகத்திலுள்ள ஒரு வகை வழக்கமாகும். இது சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆண்- பெண் உறவுநிலையைக் குறிக்கிறது”[1] என்பர்.

“திருமணம் இரண்டு தனிப்பட்டவர்களுக்கிடையே நடைபெறும் உடன்படிக்கையன்று.இரண்டு குழுக்களிடையே இணைப்பை நெருக்கத்தை ஏற்படுத்தும் உறவுத்தளை நியதி”[2] என்று குறிப்பிடுவர். சங்க இலக்கியங்கள் களவு வழிப்பட்ட கற்பு வாழ்க்கையினையே பெரிதும் பதிவு செயதுள்ளன. இருப்பினும் மணமகன் வீட்டார் மணமகள் வீட்டாரிடம் பெண் கேட்டு நிச்சயிக்கும் முறையும் வழக்கில் இருந்தமையைக் காணமுடிகிறது.

கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே
(தொல்.கற் – 1)

என்று தொல்காப்பியரும் இதனை விளக்குவார்.

”அம்மவாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போ ரிருந்தனர் கொல்லோ

தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதலவர்
நன்றுநன் றென்னு மாக்களோடு
இன்று பெரிது என்னும் ஆங்கணது அவையே”

(குறு – 146)

என்ற பாடல் பெரியவர்கள் கூடிப் பேசி திருமணம் செய்யும் முறையினைப் புலப்படுத்துகின்றது எனலாம்.

சிலம்பிலும் பெரியோர்கள் கூடி திருமணத்தை நிச்சயிக்கும் தன்மை குறிப்பிடப்பட்டுள்ளது.

”இருபெருங் குரவரும் ஒருபெரு நாளால்
மணவணி காண மகிழ்ந்தனர் மகிழ்ந்துழி
யானை எருத்தத்து அணியிழையார் மேலிரீஇ
மாநகர்க்கீந்தார் மணம்”

(மங்கல வாழ்த்துப்பாடல் 42-45)

என்ற பாடல் அடிகள் கோவலன் கண்ணகியின் பெற்றோர்கள் கூடி அவர்களது திருமணத்தை நிச்சயித்தமையை விளக்குவதாக அமைந்துள்ளன.

**சிலம்பு அணிதல்**

சங்க காலத்தில் பெண்கள் திருமணத்திற்கு முன்னர் மட்டுமே சிலம்பு அணிந்துள்ளனர்.திருமணத்திற்கு முன்பு அச்சிலம்பை நீக்கியுள்ளனர்.அதனை சிலம்புகழி நோன்பு என்று குறிப்பிட்டுள்ளனர்.

”நும்மனைச் சிலம்புகழீஇ அயரினும்
எம்மனை வதுவை நன்மணம் கழிக”

(ஐங்-399)

என்ற பாடலடிகளால் திருமணத்திற்கு சில நாட்கள் முன்னரே இச்சிலம்பு கழி நோன்பினை நிகழ்த்தியுள்ளனர் என்பதனை அறியமுடிகிறது.ஆனால்

சிலப்பதிகார காலத்தில் இவ்வழக்கம் திருமணத்தின் பின்னரும் மகளிர் சிலம்பு அணியும் வழக்கமாக மாறிவிட்டதனை அறிந்து கொள்ள இயலுகின்றது.

**பரத்தைவயிற் பிரிவு**

பரத்தை என்பதற்கு பணம் அல்லது பொருளைப் பெற்றுக் கொண்டு பாரபட்சமின்றி பாலியல் உறவு கொள்ளுதல் என்று பொருள் தருவர்.சங்க காலத்தில் ஆடவர்கள் பரத்தையரோடு தொடர்பு கொள்வது குற்றமாகக் கருதப்படவில்லை.

”பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்தகன் றுறையார் என்மனார் புலவர்
பரத்தையர் பிரிந்த காலையான”

(தொல்.கற்-46 )

என்ற நூற்பா பரத்தைவயிற் பிரிவினை அக்காலச் சமூகம் ஏற்றுக் கொண்டமையை விளக்குகிறது.மேலும் ஆண்கள் தான் முதலில் மணந்து கொண்ட மனைவியைத் தவிர மீண்டும் ஒரு பெண்ணை மணந்து கொள்வதும் வழக்கமாக இருந்துள்ளது.இதனை தொல்காப்பியர்

”பின்முறை ஆக்கிய பெரும் பொருள் வதுவைத்
தொன்முறை மனைவி எதிர்ப்பாடாயினும் ”

(தொல்.கற்-31)

என்று குறிப்பிடுகிறார். சிலப்பதிகாரக் காப்பியச் சிக்கலுக்கு கோவலன் கண்ணகியை விடுத்து மாதவியுடன் வாழ்ந்தமையும் ஒரு காரணமாகக் கூறப்படுகிறது.பரத்தைவயிற் பிரிவினை ஏற்றுக் கொண்ட ஒரு காலச்சூழலில் இத்தகைய சிக்கல் ஏன் எழுகிறது என்பது ஆய்விற்கு உரியதாகும்.சங்க இலக்கியத் தலைவன் பரத்தைவயிற் பிரிவு மேற்கொண்டான் என்றால் அது குறிப்பிட்ட நாட்களுக்கு மட்டுமே ஆகும்.அவன் குடும்பம் என்ற அமைப்பில் இருந்து முழுவதும் விலகியவனாகப் படைக்கப்படவில்லை.ஆனால் கோவலன் குடும்பம் என்ற அமைப்பினை விடுத்து மாதவியுடன்

முழுமையாகத் தங்கி விடுகின்றான்.மீண்டும் மாதவியை விடுத்து தன்னுடைய குடும்பம் என்று அவன் இணைய விரும்பும் சூழலிலே இணைய முடியாமல் சிக்கலைச் சந்திக்க நேரிடுகிறது.

**குழந்தைப்பேறு**

சங்க இலக்கியத்தில் அன்பின் ஐந்திணை வழிப்பட்ட தலைவன் தலைவிக்கு மட்டுமே குழந்தைப்பேறு சுட்டப்பட்டுள்ளது. பரத்தைக்குக் குழந்தைப்பேறு சுட்டப்படவில்லை.பரத்தையரிடம் சென்று வர சமூகத்தில் முழு உரிமையும் பெற்றுள்ளவன் ஆண். அவன் உரிமை கொண்ட பெண்ணுக்கு இல்ல உரிமையும் வாரிசு உரிமையும் மறுக்கப் பட்டது என்பர். பரத்தையும் தனக்குக் குழந்தைப்பேறு இல்லை என்பதால் தலைவனின் குழந்தையைத் தன் குழந்தையாக நினைத்து அன்பு செலுத்துவதனை

"வருகமாள என்உயிர் எனப் பெரிது உவந்து
கொண்டனன் நின்றோர் கண்டு நிலைச் செல்லேன்
மாசு இல குறுமகள் எவன் பேதுற்றனை
நீயும் தாயை இவற்கு"

(அகம்16-10 13)

என்ற பாடல் அடிகளால் அறியமுடிகிறது. பரத்தை தலைவனை விடவும் தலைவனின் புதல்வன் மீது மிகுதியான பாசம் உடையவளாகக் காணப்படுவதனை கலித்தொகை 82 ஆவது பாடல் விளக்குகிறது.

ஆனால் சிலப்பதிகாரத்தில் கணிகையர் குலத்தைச் சார்ந்த மாதவிக்கே குழந்தைப்பேறு காணப்படுகிறது.பெற்றோர் முன்னிலையில் கரம் பிடித்த மனைவியான கண்ணகிக்குக் குழந்தைப்பேறு இல்லை.

**பெண்குழந்தை விருப்பம்**

பெண்குழந்தையின் பிறப்பினை விட ஆண்குழந்தையின் பிறப்பே எல்லாக் காலங்களிலும் விரும்பப்பட்டு வந்துள்ளது.சங்க இலக்கியத்திலும் ஆண்குழந்தையே முதலிடம் பெறுகின்றது.

பொன் போல் புதல்வர் பெறாஅ தீரும்

(புறம் 9: 4)

அருள் வந்தனவால் புதல்வர்தம் மழலை

(புறம் 92:3)

முலைக்கோள் மறந்த புதல்வனோடு

(புறம் 211:21)

புகழ்சால் புதல்வன் பிறந்த பின்வா

(புறம் 222:3)

என்ற பாடலடிகள் புதல்வன் பேற்றினை விளக்கும்."புத் என்னும் நரகக் குழியில் விழாதவாறு தம்மைப் பெற்றெடுத்த பெற்றோரைப் பாதுகாப்பதால் புதல்வன்"[3] என்று அழைக்கப்படுவதாகக் குறிப்பிடுவர்.

"தாயைக் குறிப்பிடும் போதும்
சிறுவர் தாயே பேரிற் பெண்டே"

(புறம் 270 : 6)

செம்முது பெண்டிர் காதலஞ்சிறா அன்

(புறம் 276 : 3)

வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்

(புறம் 277: 2)

என்று புதல்வனின் தாய் என்று அழைப்பதிலே பெருமை கொண்டுள்ளனர்.ஒரே ஒரு பாடல் மட்டுமே பெண் குழந்தையினை நீண்ட நாள் தவமிருந்து பெற்றதாகக் குறிப்பிடுகிறது. இதனை,

"குன்றக் குறவன்கடவுட் பேணியிரந்தனன்
பெற்ற வெள்வளைக் குறுமக " (ஐங் 257)

என்ற அடிகள் வழி அறியமுடிகிறது. ஆனால் சிலப்பதிகாரத்தில் கோவலன் மணிமேகலை பிறந்த போது அவளது பிறப்பினை சிறப்பாகக் கொண்டாடுகிறான்.

"மாந்தளிர் மேனி மாதவி மடந்தை
பால்வாய்க் குழவி பயந்தனள் எடுத்து
................................................
எங்குல தெய்வப் பெயர் ஈங்கு இடுகென
அணிமேகலையார் ஆயிரம் கணிகையர்
மணிமேகலையென வாழ்த்திய ஞான்று
மங்கல மடந்தை மாதவி தன்னொடு
செம்பொன் மாரி செங்கையின் பொழிய"
(அடைக்கலக்காதை 22-41)

என்ற அடிகள் கோவலன் மணிமேகலையின் பிறப்பினை சிறப்பாகக் கொண்டாடியமையை புலப்படுத்துகின்றன.

**கணவனுடன் இறத்தல்**

சங்க காலத்தில் அரசகுல மகளிர் தம் கணவன் இறந்தவுடன் உடன்கட்டை ஏறித் தன் உயிரை மாய்த்துக் கொண்டனர்.தோற்ற மன்னரின் மனைவியை வெற்றி பெற்ற மன்னன் இழிவாக நடத்தியதே இதற்குக் காரணம் எனலாம்.தோற்ற மன்னனின் மனைவியருடை கூந்தலைக் கொய்து வெற்றி பெற்ற மன்னன் கயிறு திரித்து யானைகளைப் பூட்டியமையை,

பல் இருங் கூந்தல் முரற்சியால்
குஞ்சர ஒழுகை பூட்டி

(பதிற்.ஐந்தாம்பத்து பதிகம் 16-17)

என்ற அடிகளால் அறியலாகின்றது. போர்க்களத்தில் கணவனுடன் உடன் இறந்த மகளிரைம் புறநானூறு பதிவு செய்துள்ளது.

மார்பகம் பொருந்தி ஆங்கமைந்தனரே

(புறம் 62-15)

என்ற அடி இதனை விளக்குகிறது. சிலப்பதிகாரத்திலும் கோப்பெருந்தேவி கணவனுடன் இறந்தமையை,

”கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்
கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்று
இணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி”

(வழக்குரை காதை 79-81)

என்ற அடிகளால் அறியமுடிகிறது.

**நடுகல் வழிபாடு**

சங்ககாலத்தில் சிறப்புறப் போரிட்டு போரில் இறந்த வீரர்களுக்கு நடுகல் எடுப்பது மரபாக இருந்துள்ளது.அவ்வீரனுக்காக உடன் மாய்ந்த பெண்களுக்கும் கல்எடுப்பதும் உண்டு.அதனை சதிக்கல் என்று குறிப்பிடுவர். சிலப்பதிகாரத்தில் இந்நடுகல் வழிபாடும் சதிக்கல்லும் இணைந்து பத்தினி தெய்வ வழிபாடாக மாற்றம் பெறுகிறது. அக் காதையை இளங்கோவடிகள் நடுகற்காதை என்றே சுட்டுகிறார்.

**நவகண்டம்**

பழங்காலத்தில் மன்னர்கள் போரில் வெற்றிபெறவும் அவர்களின் முக்கிய வேலைகள் எவ்விதத் தடங்கலின்றி நடந்தேறவும் போர்வீரர்கள் தங்களை கொற்றவை தெய்வத்தின் முன், தங்களைத் தாங்களே பலியிட்டுக்

கொள்வது வழக்கம். அவ்வாறு பலியிட்டுக் கொள்பவர்கள் கூரிய வாளால் உடலை ஒன்பது பாகங்களாக கை, கால், வயிறு ஆகிய பகுதிகளை அரிந்துகொண்டு இறுதியாக தன் தலையைத் தானே அறுத்துக்கொள்வர். இத்தகைய சிற்பங்கள் "நவகண்ட சிற்பங்கள்' எனப்பட்டன.வீரர்கள் அவ்வாறு தம்மைத் தாமே பலியிட்டுக் கொள்வதற்கான பலிபீடங்கள் பட்டினப்பாக்கத்தில் இருந்தமையை இளங்கோவடிகள் பதிவு செய்துள்ளார்.

"வெற்றி வேந்தன் கொற்றம் கொள்கென
நற்பலி பீடிகை நலங்கொள வைத்தாங்கு
உயிர்ப்பலி உண்ணும் உருமுக்குரல் முழக்கத்து
மயிர்க்கண் முரசொடு வான்பலியூட்டி"

(இந்திர விழவூரெடுத்த காதை 85-88)

என்ற அடிகள் வீரர்கள் தம்முடைய தலையினைத் தாமே வெட்டி பலிபீடத்தில் வைப்பதனைக் குறிப்பிடுகின்றன.

இவை மட்டுமல்லாது கானல்வரிப்பாடல் முழுமையும் சங்கஇலக்கிச் சாயல் பெற்று அமைந்துள்ளது. கண்ணகியின் வஞ்சினம் சங்க இலக்கிய வஞ்சினப் பாடல்களைப் போன்று காணப்படுவதனை அறியலாகின்றது.இவை மேலும் ஆய்விற்குரியது.

**சான்றெண்விளக்கம்**

1. முனைவர் கே.பி.அழகம்மை சமூக நோக்கில் சங்க மகளிர் ப-44
2. சசிவல்லி தமிழர் திருமணம் ப- 8
3. முனைவர் வீ.காந்திமதி சங்க இலக்கியச் சால்பு ப.45

## உளவியல் நோக்கில் சித்திராபதி

மணிமேகலையில் இடம் பெறும் சித்திராபதி மாதவியின் தாய். பரத்தையர் குலத்தில் பிறந்தவள்.பரத்தையர் குலத்திற்கேற்ற குல ஒழுக்கங்களைத் தவறாது கடைபிடிப்பவள். தன் மகளையும் குலஒழுக்கத்திற்கு ஏற்றாற்போல் வளர்க்க எண்ணுகிறாள்.ஆயினும் மாதவி ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலையில் வாழ எண்ணுகிறாள்.மாதவி கோவலன் இறந்த பின்பு தானும் பௌத்த சமயத்தைத் தழுவி தன் மகளையும் துறவு வாழ்வை மேற்கொள்ளச் செய்கிறாள். இச்சூழலில் தன்குலஒழுக்கத்திற்கு ஏற்றாற்போல் அவர்களை மாற்ற எண்ணும் சித்திராபதியின் சொற்கள் அப்பாத்திரத்தை உளவியல் அடிப்படையில் அணுக இடம்அளிக்கின்றன.

### உளத்தற்காப்பு நிலைகள்

சித்திராபதியின் சொற்களில் உளவியல் கூறுகளான உளத்தற்காப்பு நிலைகளைக் காணமுடிகிறது.உளவியலார் "ஒரு நிகழ்வு முடிவாக இரண்டு நிலையை அடைகின்றது. ஒன்று இன்பநிலை, மற்றொன்று துன்பநிலை"[1] என்று குறிப்பிடுவர். இன்பநிலையை உள்ளம் இயல்போடும் மகிழ்வோடும் ஏற்றுக்கொள்ளும். ஆனால் துன்பநிலையை அடைய உள்ளம் மறுக்கும். துன்பமான நிகழ்வு தன்னைத் தாக்காத வண்ணம் பாதுகாத்துக் கொள்ள உள்ளம் எண்ணும். இந்நிலையால் ஏற்படும் விளைவுகளை உளவியலார் உளத்தற்காப்பு இயங்கு முறைகள் என்பர்.உளத்தற்காப்பு இயங்குமுறைகளின் வகைகளாக,

"1.உள்ளப் போராட்டம் (conflict)
2.துறப்பமைவு (Resignation)
3.ஈடுசெய்தல் (Compensation)
4.சமூகநிலை முறிவு (Social Frustration)
5.அறிவார்ந்த செயல் (Superiosty Complex)
6.உயர்வு மனப்பான்மை"[2]

ஆகியவற்றைக் குறிப்பிடுவர்.

**உள்ளப்போராட்டம் (Conflict)**

உள்ளப்போராட்டம் என்பதனை "ஒரே நேரத்தில் ஒன்றிக்கும் மேற்பட்ட விருப்பங்கள் தோன்றும் போது எதை ஏற்பது? எதை விடுப்பது? என்ற நிலைக்கு மனம் தள்ளப்படும். இதனடிப்படையில் முடிவெடுக்க இயலாதநிலையும், செயல்பட முடியாத சூழ்நிலையும் தோன்றும். இத்தகைய நிலையே உள்ளப் போராட்டம் எனபப்டும்"[3] என்று குறிப்பிடுவர். சித்திராபதியிடம் இவ்வுள்ளப் போராட்ட நிலையைக் காணமுடிகிறது. கோவலன் இறந்த செய்தியை அறிந்த மாதவி துறவறம் மேற்கொள்ள முனைகின்றாள். சித்திராபதி பரத்தையர் குலத்தில் தோன்றிய மாதவி தம் குல ஒழுகத்தை மேற்கொள்ளாத நிலையால் மிகுந்த துன்பம் அடைந்திருந்த நிலையை,

"நாவ லோங்கிய மாபெருந் தீவினுள்
காவற் றெய்வதந் தேவர்கோற் கெடுத்த
தீவகச் சாந்தி செய்தரு நன்னாள்
மணிமேகலையொடு மாதவி வாராத்
தனியாத் துன்பந் தலைத்தலை மேல்வரச்
சித்திரா பதிதான் செல்லலுற் றிரங்கித்"

(ஊரலருரைத்த காதை 1 – 6)

என்ற அடிகள் விளக்குகின்றன. சித்திராபதி மாதவி இந்திரவிழாவில் பங்குபெற வேண்டும் என்ற விருப்பம் கொண்டவளாக இருந்தாள். ஆனால் மாதவியும், மணிமேகலையும் இந்திர விழாவிற்கு வர விரும்பாத காரணத்தால் ஊரார் அலர் உரைப்பார்கள் என வருந்தி துன்பம் அடைகிறாள்.மாதவியின் செயல்பாடுகளால் உளப்போராட்டத்திற்கு ஆளாகிறாள்.

**துறப்பமைவு (Resignation)**

துறப்பமைவு என்பது உள்ளம் தற்காத்துக் கொள்ளும் வழிமுறைகளுள் ஒன்றாகும். "கவலைகளிலிருந்து விலக்கிப் பின்னடைந்து சென்று, உள்ளத்திற்கு ஏற்படும் அபாயத்தை உள்ளம் குறைத்துக் கொள்ளும் வழியை மனமானது தேடுகின்றது. இதை "துறப்பமைவு" என்று உளவியல் அறிஞர்கள் வரையறுத்துள்ளனர்"[4]. இராசமாதேவி மணிமேகலையை சிறையில் அடைத்துத் துன்புறுத்துகின்றாள். இதனால் சித்திராபதி மிகுந்த கவலை அடைகிறாள். மேலும் கவலையில் ஆழ்ந்து விடாமல் மணிமேகலையை விடுவிப்பதற்காகத் தன்முனைப்புடன் செயல்படுகிறாள். இதனை,

"கட்டுரை விரித்துங் கற்றவை பகர்ந்தும்
பட்டவை துடைக்கும் பயங்கெழு மொழியினள்"

(சிறைவிடு காதை 5 -6)

என்ற அடிகள் விளக்குகின்றன. இராசமாதேவியால் மணிமேகலைக்கு நேர்ந்த தீமைகளைக் கண்டு சித்திராபதியின் மனம் கவலை அடைகிறது. இருப்பினும் அக்கவலையிலிருந்து விடுபட்டு மணிமேகலைக்கு உதவிபுரிவதன் மூலமாக சித்திராபதி தம் உள்ளத்திற்கு ஏற்படும் அபாயத்தைக் குறைத்துக் கொள்ளும் வழிமுறையைத் தேடிக் கொண்டதை அறியமுடிகின்றது.

### ஈடுசெய்தல் (Compensation)

சித்திராபதியிடம் ஈடுசெய்தல் மனப் பான்மையைக் காணமுடிகிறது. "எதிர்பார்த்த ஒன்று கிடைக்காத போது, கிடைத்த ஒன்றை அல்லது புதிய ஒன்றை ஏற்றுக்கொள்வது மனம் சார்ந்த பண்புகளில் ஒன்றாகும். இதனை உளவியல் வல்லுநர்கள் "ஈடுசெய்தல்" என்று கூறுவர். ஒன்றைச் சாதிக்க இயலாத சூழலில் ஏமாற்றமும், முறிவும், கவலையும் உற்ற உள்ளம் பிறிதொன்றைச் சாதிக்க முயல்கின்றது"[5] என்று குறிப்பிடுவர்.

சித்திராபதி தன்னுடைய குலத்தொழிலை மாதவி மேற்கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறாள். மாதவி தன் குலத்தொழிலில் விருப்பம்

இல்லாதவளாகத் துறவு வாழ்க்கையை மேற்கொள்கிறாள். இதனால் சித்திராபதியின் எண்ணம் நிறைவு பெறவில்லை. மணிமேகலையை உதயகுமரன் விரும்புகின்றான் என்பதை அறிந்ததும் அவனிடம் மணிமேகலைச் சேர்த்து வைக்க விரும்புவதை,

"சித்திரா பதிதான் சிறுநகை எய்தி
அத்திறம் விடுவாய் அரசினங் குரிசில்
காமக் கள்ளாட் டிடைமயக் குற்றன
தேவர்க் காயினுஞ் சிலவோ செப்பின்"

(உதயகுமரன் அம்பலம் புக்க காதை 86 – 89)

என்ற அடிகள் விளக்குகின்றன. உதயகுமரன் மணிமேகலையின் மீது மிகுந்த காமம் கொள்கிறான்.அவளை அடைய விரும்பி சுதமதியின் உதவியை நாடுகிறான். அவளால் தனக்கு எந்த உதவியும் கிடைக்காது என்பதைப் புரிந்து கொண்ட உதயகுமரன் சித்திராபதியிடம் தன் உள்ளக்குறிப்பை வெளிப்படுத்துகிறான். இதனால் சித்திராபதி தன் மகள் மாதவி துறவு மேற்கொண்ட நிகழ்வு ஏமாற்றம் தந்ததால், உதயகுமரன் விரும்பிய மணிமேகலையை அவனுடன் சேர்த்து வைத்து ஈடுசெய்விக்க முயன்றமையை அறியமுடிகிறது.

**சமூகநிலை முறிவு**

மனிதர்கள் ஒவ்வொருவருடைய செயல்பாடு களுக்கும் சமூகத்தின் ஏற்பு தேவையானதாக அமைகிறது. "மனமுறிவுகளுக்கான காரணங்களுள் ஒன்றாக சமூகநிலையும் உளவியலாளர்களால் கருத்தில் கொள்ளப்படுகிறது. சமூகத்திலிருந்து ஒருவருக்குக் கிடைக்க வேண்டிய அன்பும், ஆதரவும் மறுக்கப்படும் பொழுது மனமுறிவு உண்டாகிறது"[6] என்பர். சித்திராபதி பரத்தைக்குல சமூகத்தைச் சேர்ந்தவள். இந்திரவிழா நடைபெற்றபோது மாதவியும் மணிமேகலையும் அவ்விழாவில் பங்குகொள்ளாமல் இருப்பதனால் அவ்வூரில் உள்ள மக்கள் தன்மீது வெறுப்பு கொள்வார்கள் என்று எண்ணி சித்திராபதி மனமுறிவுக்கு ஆட்படுகிறாள். இதனை,

“மணிமேகலையோடு மாதவி வாராத்
தனியாத் துன்பந் தலைத்தலை மேல்வரச்
சித்ரா பதிதான் செல்லலுற் றிரங்கித்
தத்தரி நெடுங்கட் டன்மக டோழி
வயந்த மாலையை வருகெனக் கூஉய்ப்
பயங்கெழு மாநக ரலரெடுத் துரையென”

(ஊரலருரைத்த காதை 7 – 9)

என்ற அடிகள் இதனை விளக்குகின்றன. மாதவி தான் துறவு மேற்கொண்டதோடு மட்டுமல்லாமல் தன் மகளையும் குலஒழுக்கத்தை மேற்கொள்ள விடாமல் தடையாக இருந்தாள். இதனால் ஊர் மக்களின் பழிச்சொல்லுக்கு ஆளானாள். தான் வாழும் சமூகத்தில் வாழக்கூடிய மக்களின் எதிர்ப்புக்கு உட்பட்டதால் சித்திராபதிக்கு சமூகநிலை முறிவு ஏற்படுவதைக் காணமுடிகின்றது.

**அறிவார்ந்த செயல்**

சித்திராபதி சிறந்த அறிவுத்திறன் மிக்கவளாக விளங்குகிறாள். “மனிதமனம் எப்படிப்பட்ட சூழ்நிலைகளையும் தனக்குச் சாதமான முறையில் மாற்றிக் கொள்ளும் திறன் வாய்ந்தது. கவலைகள், துன்பம் ஆகியவற்றிலிருந்து விடுபட்டு சூழ்நிலைக்கு ஏற்றவாறு உண்மையான காரணங்களை விலக்கி ஏற்கத் தகுந்த பொய்யான காரணங்களைக் கூற விழையும்”[7] என்று குறிப்பிடுவர். உதயகுமரனின் தாய் இராசமாதேவி மணிமேகலையைச் சிறையில் அடைத்து பல்வேறு இன்னல்களைக் கொடுத்த நிலையில் சித்திராபதி மணிமேகலையை இன்னலிலிருந்து மீட்க இராசமாதேவியை நாடிச்செல்கிறாள்.

“காவன் மாநகர் கலக்கொழி யாதால்
தன்பெயர் மடந்தை துயருறு மாயின்
மன்பெருந் தெய்வம் வருதலு முண்டென

அஞ்சினே னரசன் றேவியென் றேத்தி
நன்மனம் பிறந்த நாடகக் கணிகையை
என்மனைத் தருகென விராசமாதேவி"

(ஆபுத்திரன் நாடு அடைந்த காதை 71-76)

என்ற அடிகள் சித்திராபதி மணிமேகலையைக் காப்பாற்ற எண்ணியமையை விளக்குகின்றது. சித்திராபதி இராசமாதேவியின் மனத்தை மாற்றும் பொருட்டு நெடுமுடிக்கிள்ளிக்கு மணிமேகலா தெய்வம் உரைத்த சாபத்தை விளக்குகிறாள். மணிமேகலா தெய்வத்தின் பெயரைக் கொண்ட மணிமேகலைக்கு இன்னல் தருபவர்களுக்கு மிகுந்த துன்பம் விளையும் என்று இராமாதேவியிடம் எடுத்துரைக்கிறாள். மணிமேகலையைச் சிறை யிலிருந்து விடுவிக்க சித்ராபதி அரசியல் சூழ்நிலைகளையும் தனக்குச் சாதகமான முறையில் மாற்றிக் கொள்ளும் திறனை அறியமுடிகின்றது.

**உயர்வு மனப்பான்மை**

மனிதர்களிடம் உயர்வு மனப்பான்மை அல்லது தாழ்வு மனப்பான்மை என்ற ஏதேனும் ஒரு மனப்பான்மை காணப்படுவது இயல்பு. "மனிதர்களுள் ஒருவர் மற்றவர்களைவிட எல்லாப் பண்புகளிலும் உயர்ந்தவராகக் காட்டும் உளப்போக்கை உயர்வு மனப்பான்மை என்பர்"[8] சித்திராபதி தன் குலமான பரத்தைக் குலத்தின் மீது அதிகப் பற்று உடையவளாகக் காணப்படுகிறாள். பரத்தைக் குலத்தில் சிறப்புப் பெற்றவளாகத் திகழவேண்டும் என்ற உளப்போக்கினைப் பெற்று விளங்குகிறாள். இதனை,

"கோவலன் இறந்தபின் கொடுந்துயர் எய்தி
மாதவி மாதவர் பள்ளியுள் அடைந்தது
நகுதக் கன்றே நன்னெடும் பேரூர்
இதுதக் கென்போர்க்கு எள்ளுரை யாயது"

(உதயகுமரன் அம்பலம் புக்க காதை 7 – 10)

என்ற அடிகள் விளக்குகின்றன. கோவலன் இறந்தான் என்ற செய்தியைக் கேட்ட மாதவி துறவு வாழ்க்கை வாழ்கின்றாள். கணிகையர் குலப்பண்பை முற்றிலும் வெறுக்கின்றாள். மாதவியின் இயல்பினை எள்ளி நகையாடுவதன் மூலம் சித்திராபதி தான் மேற்கொண்ட கணிகைக் கோலத்தையும், குணச்செயல்களையுமே சிறந்தனவாக எண்ணியிருந்த உயர்வு மனப்பான்மையை அறியமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்**


1. குமர உள்ளம், மு.அறம், தமிழ் வெளியீட்டுக் கழகம், ப – 17
2. மேலது, ப – 17
3. மேலது, ப - 17
4. மேலது, ப – 18
5. மேலது, ப – 18
6. மேலது, ப – 19
7. மேலது, ப – 17
8. சு.சண்முகசுந்தரம்,நாட்டுபுறவியல் உளவியல் பார்வை,ப.9.

---

## சிலம்பில் முரண்கள்

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் பல புதுமைகளைப் படைத்துள்ளார். மன்னர்களே தலைவர்களாக இருந்த நிலையினை மாற்றியமைத்து குடிமக்களையும் முதன்மை வாய்ந்தவர்களாகப் படைத்துக் காட்டிய திறம் அவருக்கு உரியது. சமயப் பொதுமையை படைத்துக் காட்டல், மூவேந்தரையும் படைத்துக் காட்டுதல், கணிகையர் குலத்தைச் சார்ந்த ஒரு பெண்ணை பௌத்த துறவியாக மாற்றிக் காட்டுதல் என்று அவர் படைத்துக் காட்டிய புதுமைகளைப் பட்டியலிடலாம். அவ்வகையில் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பல முரண்பட்ட சூழல்களையும் படைத்துக் காட்டியுள்ளார்.

### குழந்தைப்பிறப்பு :

சங்க இலக்கியத்தில் அன்பின் ஐந்திணை வழிப்பட்ட தலைவன் தலைவிக்கு மட்டுமே குழந்தைப்பேறு சுட்டப்பட்டுள்ளது. பரத்தைக்குக் குழந்தைப்பேறு சுட்டப்படவில்லை. பரத்தையரிடம் சென்று வர சமூகத்தில் முழு உரிமையும் பெற்றுள்ளவன் ஆண். அவன் உரிமை கொண்ட பெண்ணுக்கு இல்ல உரிமையும், வாரிசு உரிமையும் மறுக்கப் பட்டது என்பர். பரத்தையும் தனக்குக் குழந்தைப்பேறு இல்லை என்பதால் தலைவனின் குழந்தையைத் தன் குழந்தையாக நினைத்து அன்பு செலுத்துவதனை,

”வருகமாள என்உயிர் எனப் பெரிது உவந்து
கொண்டனன் நின்றோர் கண்டு நிலைச் செல்லேன்
மாசு இல குறுமகள் எவன் பேதுற்றனை
நீயும் தாயை இவற்கு”

(அகம்16-10 13)

என்ற பாடல் அடிகளால் அறியமுடிகிறது. பரத்தை தலைவனை விடவும் தலைவனின் புதல்வன் மீது மிகுதியான பாசம் உடையவளாகக் காணப்படுவதனை கலித்தொகை 82 ஆவது பாடல் விளக்குகிறது.

ஆனால் சிலப்பதிகாரத்தில் கணிகையர் குலத்தைச் சார்ந்த மாதவிக்கே குழந்தைப்பேறு காணப்படுகிறது.

"விஞ்சையின் பெயர்த்து விழுமம் தீர்த்த
எங்குல தெய்வப் பெர்ஈங்கு இடுகென
அணிமேகலையார் ஆயிரம் கணிகையர்
மணிமேகலையென வாழ்த்திய ஞான்று"

( அடைக்கலக்காதை 36 – 39 )

என்ற அடிகள் பரத்தையர் குல மாதவியின் பிள்ளைப்பேற்றினை விளக்குகின்றன. கோவலனும் மாதவியை பரத்தைக்குலத்தைச் சார்ந்த பெண் என்று எண்ணாமல் தன் மனைவி என்று எண்ணியமை யாலேயே தன் குலதெய்வத்தின் பெயரினை இடுகின்றான். பெற்றோர் முன்னிலையில் கரம் பிடித்த மனைவியான கண்ணகிக்குக் குழந்தைப்பேறு இல்லாமல் கணிகையர் குலத்தைச்சார்ந்த மாதவிக்குக் குழந்தைப்பேற்றினைப் படைத்துக் காட்டியிருப்பது சிலப்பதிகார முரண்களுள் ஒன்று எனலாம்.

**கணவனுக்கு உணவளித்தல் :**

மங்கல வாழ்த்துப் பாடலில் கோவலன் கண்ணகியின் திருமண நிகழ்வினைக் குறிப்பிட்ட இளங்கோவடிகள் அதற்கு அடுத்த காதையாக மனையறம் படுத்த காதையினை அமைத்துள்ளார். கோவலனும் கண்ணகியும் தமக்கென இருந்த ஏழ்அடுக்கு மாளிகையில் நான்காம் அடுக்கில் இன்பமுடன் இருந்தமையை, கோவலனுக்குக் கண்ணகியின் மீதிருந்த அளப்பறிய அன்பினை விளக்குவதாக இக்காதையை இளங்கோவடிகள் அமைத்துள்ளார். ஆயினும் மனையறம் படுத்த காதையில் கோவலன் கண்ணகியை உலவாக்கட்டுரை பலபாராட்டியமையை மட்டுமே விளக்கிச் சுட்டியுள்ளார்.அதனை அடுத்து,

"வாரொலி கூந்தலைப் பேரியற் கிழத்தி
மறப்பருங் கேண்மையோ டறப்பரி சாரமும்

விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்
வேறுபடு திருவின் வீறுபெறக் காண
உரிமைச் சுற்றமோடு ஒருதனி புணர்க்க”

(மனையறம் படுத்த காதை 84 – 88)

என்று கோவலன் கண்ணகியைத் தனிக்குடித்தனம் வைத்த செய்தியோடு இக்காதையை இளங்கோவடிகள் நிறைவு செய்கின்றார். அவள் கோவலனோடு இல்லறத்தில் எத்தகைய முறையில் இல்லற வாழ்வினை சிறப்புடன் நடத்தினாள் என்பது குறித்து அவர் விளக்கவில்லை.

ஆனால் கொலைக்களக் காதையில் கண்ணகி கோவலனுக்கு உணவு சமைத்துப் பரிமாறும் காட்சியைக் காட்சிப்படுத்துகிறார். கவுந்தியடிகளால் கோவலன் கண்ணகியை அடைக்கலமாகப் பெற்ற மாதரி செம்மண் பூசிய சிறு இல்லத்தில் அவர்களை இருக்கச் செய்கிறாள். கோவலனுக்கு உணவு சமைத்துப் பரிமாற ஐயையை துணை இருக்கச் செய்து புதுப்பாத்திரங்களை அளிக்கச் செய்கிறாள். உணவு சமைக்கத் தேவையான பொருட்களையும் கொடுக்கின்றாள்.

”மடைக்கலந் தன்னொடு மாண்புடை மரபின்
கோளிப் பாகல் கொழுங்கனித் திரள்காய்
வாள்வரிக் கொடுங்காய் மாதுளம் பசுங்காய்
மாவின் கனியொடு வாழைத் தீங்கனி
சாலி யரிசி தம்பால் பயனொடு
கோல்வளை மாதே கொள்கெனக் கொடுப்ப”

(கொலைக்களக் காதை 23 – 28)

என்ற அடிகள் கண்ணகி கோவலனுக்கு உணவு சமைக்கப் பெற்ற பொருட்களைக் குறிப்பிடுகின்றன. கண்ணகி உணவு சமைத்த காட்சியினை,

”மெல்விரல் சிவப்பப் பல்வேறு பசுங்காய்
கொடுவாய்க் குயத்து விடுவாய் செய்யத்

திருமுகம் வியர்த்தது செங்கண் சேந்தன
கரிபுற அட்டில் கண்டனள் பெயர
வைஎரி மூட்டிய ஐயை தன்னொடு
கையறி மடைமையின் காதலற்கு ஆக்கி”

(கொலைக்களக் காதை 29 – 33)

என்ற அடிகளில் காட்சிப்படுத்துகிறார். உணவு சமைத்து முடித்த பின் கோவலனை உபசரித்தமையை,

”தாலப் புல்லின் வால்வெண் தோட்டுக்
கைவல் மகடூஉக் கவின்பெறப் புனைந்த
செய்வினைத் தவிசில் செல்வன் இருந்தபின்
கடிமலர் அங்கையில் காதலன் அடிசீர்
சுடுமண் மண்டையில் தொழுதனள் மாற்றி”

(கொலைக்களக் காதை 35 – 39)

என்ற அடிகள் விளக்குகின்றன. கோவலனுக்கு உணவு பரிமாறியமையை,

”மண்ணக மடந்தையை மயக்கொழிப் பனள்போல்
தண்ணீர் தெளித்துத் தன்கையால் தடவிக்
குமரி வாழையின் குருத்துஅகம் விரித்தீங்கு
அமுதம் எண்க அடிகள் ஈங்கு“

(கொலைக்களக் காதை 40 – 43)

என்று கண்ணகி கோவலனுக்கு உணவு பரிமாறிய காட்சியைப் பதிவுசெய்துள்ளார். கண்ணகி கோவலனுக்கு சமைத்து உணவு பரிமாறும் காட்சி மனையறம் படுத்த காதையில் வந்திருத்தல் பொருத்தமானது. ஆனால் கோவலன் உயிர் துறக்கும் நிகழ்வு நிகழும் கொலைக்களக் காதையில் படைத்துக் காட்டியிருப்பது அவலச் சுவையை மிகுவிப்பதற்காகவே எனலாம்.

**கோவலன் வணிகக்குடியினரை சந்திக்காதிருத்தல் :**

ஊர்காண்காதையில் புறஞ்சேரியில் கண்ணகியுடன் இருந்த கோவலன் கவுந்தியடிகளிடம் மதுரை மாநகரில் உள்ள பெருவணிகருக்குத் தனது நிலைமையை அறிவித்து வருவதாகக் கூறுகின்றான்.

“தொன்னகர் மருங்கின் மன்னர் பின்னோர்க்கு
என்னிலை உணர்த்தி யான்வருங் காறும்“

(ஊர்காண்காதை 21 – 22)

என்ற அடிகள் இதனை விளக்குகின்றன. கவுந்தியடிகளும் கண்ணகியுடன் தங்குவதற்கு மதுரையில் இடம் பார்த்து வரும் படிக் கூறி கோவலனை அனுப்புகிறார். ஆனால் கோவலனோ கணிகையர் வீதி, எண்ணென் கலைஞர் வீதி, அங்காடி வீதி, நவரத்தினக் கடைவீதி, பொன்மிகு கடை வீதி, துணிக்கடை வீதி, கூல வீதி ஆகியவற்றைக் கண்டு வருகின்றானே தவிர, தன் வணிக குலத்தைச் சார்ந்த ஒருவரையும் கண்டு அவன் தன் நிலையை விளக்கவில்லை. இதுவும் சிலம்பில் காணப்படும் முரண்களில் ஒன்றாகும். இதற்குக் கோவலன் மனதில் இருந்த குற்றவுணர்வு காரணமாக இருந்திருக்கலாம். அல்லது காப்பியத்தின் வளர்ச்சிக்காக இங்கோவடிகள் அவ்வாறு அமைத்திருக்கலாம் எனக் கருத வேண்டியுள்ளது.

**நீதி தவறும் சூழல்**

கண்ணகி கோவலன் கொலையுண்ட பின் மதுரையை எரிக்கின்றாள். அவளது சினத்தைத் தவிர்ப்பதற்காக மதுராபதித் தெய்வம் அவள் முன் தோன்றி பாண்டியர் குலத்தின் சிறப்பினைக் குறிப்பிடுகிறது. அப்போது பராசரன் என்னும் அந்தணன் கதையைக் கூறுகிறது.

சேரமன்னனின் பரிசினைப் பெற்று தன் ஊரினை நோக்கி வந்த பராசரன் திருத்தங்கல் என்னும் இடத்தில் விளையாண்டு கொண்டிருந்த அந்தணச் சிறுவர்களைக் காண்கிறான்.தனக்கு இணையாக மறை ஓதுபவர்க்குத் தன்னிடம் உள்ள பரிசுகளில் சிறிய மூட்டையைத் தருவதாகக் கூறுகிறான். வார்த்திகன் என்னும் அந்தணனின் மகன் சிறப்பாக ஓதி

அவனிடம் பரிசு பெற்றுத் தன் இல்லம் செல்கின்றான்.அரசுப் பணியாளர்களில் சிலர் அவர்களது வளத்தினைக் கண்டு பொறாமை கொண்டு வார்த்திகனை அரசியல் முறைக்குப் புறம்பாகப் புதையல் பொருளைக் கவர்ந்து கொண்டவன் இவன் என்று கூறி குற்றம் சாட்டி சிறைக்கோட்டத்தில் இட்டனர்.சிறையில் இடப்பட்ட வார்த்திகனின் மனைவி கார்த்திகை என்பாள் துயரமடைந்தாள். அவளின் நிலை உணர்ந்த கொற்றவை கோவிலின் கதவு மூடிக்கொண்டது. அதுகேட்டு பாண்டிய வேந்தன் தன் ஆட்சியில் கொற்றவைக்கு மனக்குறை ஏற்பட்டதை அறிந்து அதன் காரணத்தை ஆராய முற்பட்டான். வார்த்திகனை சிறையில் இருந்து வெளிக்கொணர்ந்தான்.

அந்தணன் மனைவி கார்த்திகைக்கு துன்பம் ஏற்பட்ட நிலையில் கொற்றவை கோவில் கதவு மூடிக்கொண்டது என்று குறிப்பிடும் இளங்கோவடிகள் கோவலன் கொலை செய்யப்பட்ட நிலையில் ஏதேனும் இது போல் நிகழ்வு நடந்தமையைக் குறிப்பிடவில்லை. இந்த முரணும் ஆராய்ச்சிக்குரிய ஒன்று எனலாம். நடுகல் வழிபாட்டினைப் பெருந்தெய்வ வழிபாடாக மாற்ற முயன்ற நிலையில் அந்தணர்களுக்கு என்று சிறப்பாக முதன்மை தர வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டு இருந்ததா என்பதும் ஆய்விற்கு உரியது.

சிலப்பதிகாரத்தில் காணக்கூடிய இம் முரண்கள் யாவும் காப்பியத்தின் வளர்ச்சிக்கு உதவுவதாகவோ, பாத்திரத்தின் மீதான பண்புநலனில் மாற்றம் கொள்வதற்காகவோ, அக்காலச் சுழலின் நிர்பந்தம் காரணமாகவோ ஆசிரியரால் படைத்துக் காட்டப்பட்டுள்ளது எனலாம்.

## சிலம்பில் வஞ்சினம்

சிலப்பதிகாரம் சங்க காலத்தைத் தொடர்ந்து எழுந்த காப்பியம் ஆதலால் சிலம்பில் சங்க இலக்கியச் சாயல்கள் சில தொடர்ந்தும் சில மாற்றம் பெற்றும் அமைந்து வரக் காணஇயலுகின்றது.வஞ்சினம் என்பது புறப்பாடல்களில் காணக் கூடிய ஒன்று.சிலம்பில் வஞ்சினம் இடம்பெறக் கூடிய பல சூழல்களை நாம் அறிமுடிகிறது.சிலம்பில் கண்ணகி சேர மன்னன் ஆகியோரது வஞ்சின மொழிகள் தாண்டி வஞ்சினம் வெளிப்படக் கூடிய சில இடங்களும் காணப்படுகின்றன.

**வஞ்சினம்**

போருக்குச் செல்லக் கூடிய அரசன் ஓர் இலக்கை முன்மொழிந்து அதனை அடையாத நிலையில் தான் பெறவிருக்கும் கெடுதலையும் உடன்மொழிவது வஞ்சினம் ஆகும்.இந்த வஞ்சினத்தைத் தொல்காப்பியர் காஞ்சித்திணையுடன் பொருத்தி வஞ்சினக்காஞ்சி என்னும் துறையாக அமைத்துள்ளார்.

காஞ்சி என்பது நிலையாமையைக் குறிக்கும்.போரில் தனக்கோ அல்லது தம்மை எதிர்த்து வரும் பகைவருக்கோ ஏதோ ஒரு புறம் அழிவு உண்டு என்னும் நிலையாமையை உணர்த்துவதால் இத்துறை காஞ்சித் திணையின் கீழ் அடங்குகிறது.வஞ்சினக் காஞ்சி குறித்து

இன்னது பிழைப்பின் இதுவாகியரெனத்
துன்னருஞ் சிறப்பின் வஞ்சினத்தானும்

(தொல்.பொருள்.புறத்.நூ – 19)

என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். வஞ்சினம் குறித்து வீரயுகத் தலைவனின் ஆளுமைத்திறனை (personality) விரித்துரைக்க பாடல்களில் பாணர்களால் பன்படுத்தப்படுகிறது.மறத்தின் அதன் ஆற்றலில் வெளிப்படும் வெஞ்சினத்தின் அடிப்படையே வஞ்சினம் என்றும் கூறுவர்[1] புறப்பொருள்

வெண்பா மாலை காஞ்சிப்படலத்தில் ஏழாவது கொளு வஞ்சினக் காஞ்சியைக் குறிப்பிடுகிறது. போருக்குச் செல்லும் அரசன் இன்று மாலை சூரியன் மறைவதற்குள் பகைவரை வெல்வேன் என்று உறுதி கூறும் நிலையில் அவ்வாறு வெல்லத் தவறினால் வெற்றியைத் தேடித் தரும் வேலினைக் கையில் பிடிக்க மாட்டேன்.மாறாகப் பகைவரின் முன் நின்று அவரது ஏவல் மொழியைக் கேட்டு அவருக்குப் பணி செய்து காத்துக் கிடப்பவனாவேன் என்று குறிப்பிடுவதனை

> "இன்று பகலோன் இறவாமுன் ஒன்னாரை
> வென்று களம் கொள்ளா வேல் உயிர்ப்பின் – என்றும்
> அரணழியப் பாயும் அடையார் முன் நிற்பேன்
> முரணழிய முன் முன் மொழிந்து"

(புறப்பொருள்வெண்பாமாலை– வஞ்சினக்காஞ்சி – 69)

என்பதால் அறியமுடிகின்றது. புறநானூற்றில் மூன்று அரசர்களின் வஞ்சினத்தைக் காணமுடிகிறது. ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் (புறம் – 71) பாண்டியன் தலையானங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் (புறம் – 72) சோழன் நலங்கிள்ளி (புறம் – 73) ஆகிய மூன்று அரசர்களின் வஞ்சினம் புறநானூற்றில் இடம் பெறுகிறது.

**கண்ணகி**

கண்ணகி ஊழ்வினை செலுத்துவதால் தன் கணவனுடன் புகாரை விட்டு நீங்கி மதுரை மாநகர் வந்தடைகிறாள்.வந்த இடத்தில் ஊழின் வலிமையால் பொற்கொல்லன் சதிச்செயலால் கணவனை இழக்கிறாள்.கணவன் கொலைக்குக் காரணமான பாண்டிய மன்னனையும் மதுரை மாநகரினையும் அழிப்பதாக கண்ணகி வஞ்சினம் மொழிகின்றாள். கண்ணகியின் வஞ்சினத்தை விளக்க இளங்கோவடிகள் வஞ்சினமாலை என்று ஒரு காதையினையே அமைத்துள்ளார்.

கோவலன் குற்றமற்றவன் என்பதனை உணர்ந்த பாண்டிய மன்னன் உயிர்த் துறக்கின்றான்.கணவனோடு கோப்பெருந்தேவியும் தன் இன்னுயிர் நீக்கிறாள்.ஆனால் துன்பத்தில் இருந்த கண்ணகி அவளது இறப்பினை அறியாதவளாக கற்புடைய மகளிர் குறித்து கோப்பெருந்தேவியிடம் கூறுவாளாய் உரைக்கின்றாள். அத்தகை கற்புடைய பெண்கள் பிறந்த பதியில் தோன்றிய நானும் கற்புடையவள் என்பது உண்மையானால் நீ இனிதிருக்க விடேன்.மன்னனோடு மதுரையையும் அழிப்பேன் என்று வஞ்சினம் கூறுவதனை

“பட்டாங்கு யானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டேன் அரசோ டொழிப்பேன் மதுரையுமென்
பட்டிமையும் காண்குறுவாய் நீ“

(வஞ்சினமாலை 36-38)

என்ற அடிகள் வழி அறியலாகின்றது.தன் கணவனை பழி சுமத்தி கொலைக்கு ஆளாக்கிய மன்னனோடு அம்மதுரை மாநகரினையும் அழிக்க வேண்டும் என்ற வஞ்சினம் கண்ணகி மனதில் எழுந்ததனை இதன்வழி அறிய முடிகிறது.

**சேரன்செங்குட்டுவன்**

சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு சிலை எடுக்க இமயத்தில் இருந்து கல் கொணர விரும்புகிறான்.அந்நிலையில் வடபுலத்து வேந்தர்களின் இழிச்சொல்லைக் கேட்டு “இமயமலையிலிருந்து வந்த தவத்தினை உடைய முனிவர்கள் அறிவித்த முறையான வாழ்க்கையை அமைக்காதவரான வடபுல மன்னர்களின் பழிச்சொல்லானது அழியாது எம்மிடத்தே இருப்பதாயின் அது சோழ பாண்டியர்கள் எம்மை இகழ்ந்து பேசுவதற்குச் சரியாகி விடும்.ஆதலால் வடநாட்டு வேந்தர்களின் முடியினை உடைய தலையின் மீது இப்பத்தினித் தெய்வத்திற்கு உருவம் அமைப்பதற்குரிய கல்லினைக் கொண்டு வருவேன். அவ்வாறு இல்லாமல் எனது வெற்றி வாளானது மீண்டு வருமேல் வீரக்கழல்களைக் கால்களில் அணிந்து சென்று கொடிய போர்க்களத்தில் பகைவர்களை நடுங்கச் செய்யாது நாட்டில் உள்ள குடிமக்கள் நடுங்குமாறு

கொடுங்கோலாட்சி செலுத்தும் வேந்தன் என்று குடிமக்கள் பழிதூறறும் இழிந்த தன்மை உடையவன் ஆவேன்" என்று வஞ்சினம் கூறுவதனை,

"இமையத் தாபதர் எமக்கீங்கு உணர்த்திய
அமையா வாழ்க்கை அரைசர் வாய்மொழி
நம்பால் ஒழிகுவ தாயின் ஆங்குஅஃது
எம்போல் வேந்தர்க் கிகழ்ச்சியும் தரூஉம்
வடதிசை மருங்கின் மன்னர்தம் முடித்தலைக்
கடவு ளெழுதவோர் கல்கொண் டல்லது
வறிது மீளுமென் வாய்வா ளாகில்
செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்
பகையரசு நடுங்காது பயங்கெழு வைப்பில்
குடிநடுக் குறூஉங் கோலே காகென"

(கால்கோட்காதை -9-18)

என்ற அடிகள் விளக்குகின்றன. பாண்டியன் தலையானங்கானத்துச் செறு வென்ற பாண்டியன் தன்னுடைய பாடலில்,

"என்நிழல் வாழ்நர் சென்னிழல் காணாது
கொடியன்எம் இறைஎனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக"

(புறம்72 10-12)

என்று குறிப்பிடுகிறான். இதன்வழி தமிழக வேந்தர்கள் குடிமக்கள் தம்மைக் கொடுங்கோலன் என்று பழிதூற்றுவதற்கு அஞ்சியமையை அறியலாகின்றது.

**நீலியின் சாபம்**

கோவலனின் மறைவால் துயரம் கொண்டு மதுரையை எரித்த கண்ணகியிடம் மதுராபதித் தெய்வம் அவளது பழம்பிறப்பை உணர்த்துகிறது. சிங்கபுரம் கபிலபுரம் என்னும் இரண்டு நாட்டு வேந்தர்களான வசு மற்றும் குமரன் என்பவர்களுக்கு இடையிலான பகையினால் பரதன் என்பவன்

சூழ்ச்சியால் சங்கமன் என்பான் கொல்லப்பட்டான். அப்பரதனே கோவலன். கொலைக்களப்பட்ட சங்கமன் மனைவி நீலி என்பவள் பதறித்துடித்து மன்றங்களிலும் தெருக்களிலும் அலைந்து திரிந்தாள்.பதினான்கு நாட்கள் சென்ற பின் கணவனை வணங்குவதற்குரிய நாள் இது எனக்கருதி அவனை வாழ்த்தி மலை உச்சியில் இருந்து விழுந்து தன் கணவனை அடைய எண்ணினாள்.அப்பொழுது எமக்கு இங்ஙனம் கொடிய துன்பத்தினைச் செய்தவர்கள் தாமும் இத்தகைய துன்பத்தினை அடைவார்களாக என்று கூறி உயிர்த்துறக்கிறாள்.இதனை,

"எம்முறு துயரம் செய்தோ ரியாவதும்
தம்முறு துயரமிற் றாகுக வென்றே
விழுவோள் இட்ட வழுவில் சாபம்"

(கட்டுரை காதை 166 – 168)

என்ற அடிகள் விளக்குகின்றன. நீலியின் வார்த்தைகளில் சாபம் காணப்பட்டாலும் தன்னை இந்நிலைக்கு ஆளாக்கியவர்கள் தானும் அந்நிலையை அடைய வேண்டும் என்ற வஞ்சினம் அவளது வார்த்தையில் ஒலிப்பதனைக் காணமுடிகிறது.

**கீரிப்பிள்ளையைக் கொல்லுதல்**

கோவலனின் பண்புநலனை விளக்குமிடத்தில் கீரியைக் கொன்ற பார்ப்பினியின் கதை இடம் பெறுகின்றது.பார்ப்பினியின் குழந்தையைக் காக்கும் பொருட்டு கீரி பாம்பினைக் கொல்கிறது.வெளியில் இருந்து வந்த பார்ப்பினி கீரியின் வாயில் இரத்தத்தைக் கண்டு கீரி தன்னுடைய குழந்தையைக் கொன்று விட்டதாக எண்ணுகிறாள்.அதற்குப் பழி வாங்கும் செயலாக அக்கீரியினைக் கொள்கிறாள்.இதனை,

"பிள்ளை நகுலம் பெரும்பிறி தாக
எள்ளி மனையோன் இனைந்துபின் செல்ல
வடதிசைப் பெயரும் மாமறை யாளன்"

(அடைக்கலக்காதை 54-56)

என்ற அடிகள் வாயிலாக அறியமுடிகிறது. தன்னுடைய குழந்தையைக் கொன்ற கீரியைக் கொல்ல வேண்டும் என்ற வஞ்சினம் பார்ப்பினியின் மனதில் நிறைந்திருந்தமையை குறிப்பாக உணர இயலுகின்றது.

மனித மனதில் இயல்பாக எழும் உணர்வுகளே, அன்பு, கோபம் ,பொறாமை, சினம் போன்றவையாகும். அக்கோப உணர்வின் வெளிப்பாடாகவே இவ்வஞ்சினம் அமைகின்றது என்றால் மிகையில்லை.

**சான்றென் விளக்கம்**

1. ந.கடிகாசலம் ச.சிவகாமி சங்க இலக்கியம் கவிதையியல் நோக்கு சிந்தனைப் பின்புல மதிப்பீடு ப.361

## சிலம்பில் வைணவம்

சமயம் என்ற சொல் சமைத்தல் பண்படுத்தல் என்ற பொருளைக் கொண்டது. மனிதனின் அச்ச உணர்வே வழிபாட்டு முறையின் தோற்றத்திற்குக் காரணம் எனலாம். ஆரம்பகால மக்களிடையே இயற்கை வழிபாட்டு முறையே வழக்கில் இருந்தது. பின்னர் தமிழர் பண்பாட்டோடு பிற பண்பாட்டுக் கலப்புகளும் கலந்து மக்களின் வாழ்க்கைமுறையில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கிய நிலையில், வழிபாட்டு முறையிலும் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. தமிழின் முதல் காப்பியமான சிலப்பதிகாரம் தமிழர் மரபில் கலந்த பிற வழிபாட்டுமுறைகளையும் பதிவு செய்துள்ளது. சிலம்பில் சைவம் ,வைணவம், சமணம், பௌத்தம், ஆசீவகம் என்று பல்வேறு சமயப்பதிவுகளைக் காணலாகிறது. அவற்றுள் வைணவ சமயப்பதிவினை இக்கட்டுரை ஆராய்கிறது.

### தமிழரின் வழிபாட்டுமுறை

தமிழர் வழிபாட்டில் தொடக்ககாலத்தில் இயற்கை அடிப்படையிலான வழிபாட்டு முறையே நிலவியது. தமிழரிடையே மரவழிபாடு, சந்திர வழிபாடு இருந்தமையை சங்க இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன. அதன் தொடர்ச்சியாக சிலப்பதிகாரத்திலும் இயற்கை வழிபாட்டு முறையினை இளங்கோவடிகள் காட்சிப் படுத்தியுள்ளார். திங்களைப் போற்றுதும்,ஞாயிறு போற்றுதும்,மாமழை போற்றுதும் என்று இயற்கை வழிபாட்டினை முன்நிறுத்தி காப்பியத்தினைத் தொடங்குகின்றார். கண்ணகியும் தன் கணவன் குற்றம் சாட்டப்பட்டு இறந்த நிலையில் காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என் கணவன் என்று சூரியனையே சாட்சிக்கு அழைப்பதாக இளங்கோவடிகள் காட்சிப்படுத்தியுள்ளார்.

காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என்கணவன்

(ஊர்சூழ்வரி – 51)

என்ற அடி இதனை விளக்குகின்றது. அதுமட்டுமல்லாது தமிழகத்தில் இருந்த வழிபாட்டு முறையினை நில அடிப்படையிலான வழிபாட்டு முறையாகக் கருதவும் இடம் உள்ளது.

“மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன்  மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என
சொல்லிய முறையால் சொல்லவும் பெறுமே“

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். இதன் வழி திருமால் வழிபாடு தமிழகத்தில் தொன்று தொட்டு நிலவியமையை அறியலாகின்றது. சங்கப்பாடல்களிலும் மிகுதியாகக் குறிக்கப்படும் தெய்வம் திருமாலே என்பது அறிஞர்கள் கருத்து. மண் காக்கும் மன்னனை திருமாலுக்கு ஒப்புமை கூறுவது மரபு.தொல்காப்பியப் புறத்திணைத் துறைகளுள் ஒன்று பூவைநிலை.பூவை என்பது காயா மரத்தைக் குறிக்கும் சொல்லாகும். காயாம்பூ வண்ணனாகிய திருமாலை ஒப்புமை காட்டி அப்பூவைப்புகழ்தல்  பூவைநிலை ஆகும். இத்துறை அரசனைத் திருமாலோடு ஒப்பிட்டுப் போற்றுகின்ற துறையாக மாற்றமும் வளர்ச்சியும் பெற்றது.

இளங்கோவடிகள் ஆய்ச்சியர் குரவையில் உள்வரி வாழ்த்தில் மூவேந்தர்களையும் குறிப்பிடும் போது திருமாலுக்கு இணையாக ஒப்புமை காட்டி இருப்பதனை,

“மன்னன் வளவன் மதிற்புகார் வாழ்வேந்தன்
பொன்னந்திகிரிப் பொருபடையான் என்பரால்“

(ஆய்ச்சியர் குரவை – உள்வரிவாழ்த்து 2)

“மன்னர்கோச் சேரன் வளவஞ்சி வாழ்வேந்தன்

கன்னவில் தோள் ஓச்சிக் கடல்கடைந்தான் என்பரால்“

(ஆய்ச்சியர் குரவை – உள்வரிவாழ்த்து 3)

என்ற பாடலடிகளால் அறியலாகின்றது. மேலும் சேரன் செங்குட்டுவனிடம் மாடலமறையோன் அறம் செய்வதைப் பற்றிப் பேசும் போது,

திருஞெமிர் அகலத்துச் செங்கோல் வேந்தே

(நடுகற்காதை – 157)

என்ற அடியில் மன்னனை திருமாலாகக் கருதும் அடிப்படையில் திருமகள் தங்கும் மார்பினனாக சேரன் செங்குட்டுவனைக் குறிப்பிடுகிறார்.

**மன்னனின் சமயப்பொறை**

இளங்கோவடிகள் சேரன் செங்குட்டுவனைக் குறித்துக் குறிப்பிடும் போது யாரையும் வணங்காத செங்குட்டுவன் சிவபெருமானின் கோவிலை வலம் வந்து வணங்கினான் என்று குறிப்பிடுகிறார்.

இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி வலம் கொண்டு

(கால்கோட் காதை – 57)

என்ற பாடலடி இதனை விளக்குகிறது. ஆனால் அத்தகைய செங்குட்டுவன் திருவனந்தபுரத்தில் பாம்பணையில் அறிதுயில் கொள்ளும் திருமாலின் சேடம் அளிக்கப்பட்டபோது அதனை தோளில் ஏற்றுக் கொண்டான் என்று இளங்கோவடிகள் சுட்டுகிறார். சேடம் என்பதற்கு இறைவனுக்குப் படைக்கும் பொருள் என்று தமிழ் அகராதி பொருள் தருகின்றது. ஆகவே இவ்விடத்தில் திருமாலுக்கு அணிவிக்கப்பட்ட மாலை என்று பொருள் கொள்ளலாம்.

“ஆடக மாடத்து அறிதுயில் அமர்ந்தோன்
சேடம் கொண்டு சிலர் நின்றேத்தத்
தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்
ஆங்கது வாங்கி அணிமணி புயத்துத்
தாங்கினனாகி“ (கால்கோட் காதை 62-67)

என்ற பாடலடிகள் செங்குட்டுவனின் சமயப்பொறையை விளக்குவனவாக அமைகின்றன. இறைவனுக்குப் படைக்கும் பொருள்களை மன்னர்களுக்கு பிரசாதமாக வழங்கும் வழக்கம் இருந்திருப்பதனையும் இதன்வழி அறியலாகின்றது.

**திருமகள்**

திருமகள் திருமாலின் மார்பில் வாசம் செய்பவள். அசுரரின் போர்க்கோலம் நீங்கும் படியாக திருமகள் பாவைக்கூத்து ஆடினாள் என்பதனை,

“செருவெங் கோலம் அவுணர் நீங்கத்
திருவின் செய்யோள் ஆடிய பாவையும்“

(கடலாடு காதை – 60-61)

என்ற அடிகளால் அறியலாகின்றது. மேலும், அழகிற்கும் செல்வத்திற்கும் உரியவளாகத் திருமகளைக் குறிப்பிடுவது மரபு. திருமகள் இருக்கும் இடத்தில் செல்வவளம் நிறைந்திருக்கும் என்பது பழந்தமிழர் நம்பிக்கை. இளங்கோவடிகள் புகார் நகரினைக் குறிப்பிடும் போது,

திருமகள் இருக்கை

(கடலாடு காதை – 127)

என்று குறிப்பிடுகிறார். கண்ணகியைக் குறிப்பிடும்போது,

போதிலார் திருவினாள்

(மங்கல வாழ்த்துப்பாடல் – 26)

என்றும் , மணிமேகலையின் அழகைக் குறிப்பிடும் போதும்,

“பருவம் அன்றியும் பைந்தொடி நங்கை
திருவிழை கோலம் நீங்கினாளாதலின்“

(வரந்தரு காதை – 35-36)

என்றும் குறிப்பிடுகிறார். மேலும், திருமகள் பாற்கடலைக் கடையும் போது கிடைத்த அமிழ்தத்தின் உடன் தோன்றியவள் என்ற புராணச் செய்தியின் அடிப்படையில் கோவலன் கண்ணகியை திருமகளாகச் சுட்டுவதனை,

“குழவித் திங்கள் இமையவர் ஏத்த
அழகொடு முடித்த அருமைத்து ஆயினும்
உரிதின் நின்னோடுடன் பிறப்புண்மையின்
பெரியோன் தருக திருநுதலாகென“

(மனையறம் படுத்த காதை – 38- 41)

மூவா மருந்தின் முன்னர்த் தோன்றலின்

(மனையறம் படுத்த காதை – 46)

என்ற அடிகளின் வழிக் காணலாகின்றது. திருமாலின் மார்பில் திருமகள் உறைவதாக வைணவர் நம்பிக்கை. பாண்டியன் நெடுஞ்செழியனைக் குறிப்பிடும்போது,

திருவீழ் மார்பின் தென்னவர் கோவே

(வழக்குரை காதை – 23)

என்று இளங்கோவடிகள் சுட்டுகிறார். சேரன் செங்குட்டுவனைக் குறிப்பிடும் போது மாடல மறையோனும்,

திருஞெமிர் அகலத்துச் செங்கோல் வேந்தே

(நடுகற்காதை – 157)

என்று குறிப்பிடுகிறார். இதன் வழி மன்னனை மக்கள் காக்கும் கடவுளான திருமாலுக்கு இணையாக எண்ணி வணங்கி வந்தமையை அறியலாகின்றது.

**திருமாலின் தங்கை கொற்றவை**

சிலப்பதிகாரத்தில் திருமாலின் தங்கையாகக் கொற்றவை குறிக்கப்படுகின்றாள். இளங்கோவடிகள் வேட்டுவ வரியில் கொற்றவை வழிபாட்டின் போது,

திருவமாற் கிளையாள் திரு முன்றிலே

(வேட்டுவ வரி – 3)

என்ற பாடலடியில் கொற்றவையை திருமாலின் தங்கையாகக் குறிப்பிடுகிறார். மேலும் கண்ணனின் அவதாரச் செய்தியினை அவரது தங்கையாகிய கொற்றவை மீது ஏற்றிக் கூறுவதை,

“மருதின் நடந்துநின் மாமன் செய் வஞ்ச
உருளுஞ் சகடம் உதைத்தருள் செய்குவாய்“

(புறஞ்சேரி இறுத்த காதை – 22)

என்ற பாடலடிகள் வழி அறியலாகின்றது.

**நப்பின்னை**

கண்ணனின் மனைவியாக தமிழர் வழிபாட்டில் நப்பின்னையே கருதப்படுகிறாள். கண்ணன் தமிழர் மரபுப்படி நப்பின்னைக்காக எருதுகளை அடக்கினான் என்பர். மாதரியின் இல்லத்தில் கோவலனுக்கு உணவு சமைத்துப் பரிமாறிய கண்ணகியைக் கண்டு மாதரியும் ஐயையும்,

“ஆயர் பாடியின் அசோதை பெற்றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ
நல்லமுது உண்ணும் நம்பிஈங்குப்
பல்வளைத் தேளியும் பண்டு நம் குலத்துத்
தொழுனை யாற்றினுள் தூமணி வண்ணனை
விழுமம் தீர்த்த விளக்குக் கொல்“

(கொலைக்களக் காதை 46- 51)

என்று மகிழ்வதாக இளங்கோவடிகள் படைத்துள்ளார். கண்ணகியையும், கோவலனையும் கண்ணனாகவும், நப்பின்னையாகவும் சித்தரித்துள்ளமையை இதன்வழி அறியலாகின்றது.

**திருமாலின் கோவில்**

சிலம்பில் புகார் நகரில் இருந்த கோவில்களைப் பற்றிக் குறிப்பிடும் போது,

“வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்“

(இந்திர விழவூரெடுத்த காதை – 171-172)

என்று திருமாலுக்கும், பலராமனுக்கும் கோவில் இருந்த செய்தி பதிவிடப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது கோவலனும் கண்ணகியும் புகார் நகரினை விட்டு மதுரைக்குச் செல்லும் போது திருமால் கோவிலைக் கடந்து சென்றமையை,

“அணிகிளர் அரவின் அறிதுயில் அமர்ந்த
மணிவண்ணன் கோட்டம் வலம்செயாக் கழிந்து“

(நாடுகாண் காதை -9-10)

என்ற அடிகள் விளக்குகின்றன. மேலும் இளங்கோவடிகள் மதுரையில் காணப்பட்ட கோவில்களைக் குறிப்பிடுமிடத்தில்,

“உவணச்சேவல் உயர்ந்தோன் நியமமும்
மேழி வலன் உயர்ந்த வெள்ளை நகரமும்“

(ஊர்காண்காதை – 8-9)

என்ற பாடலடியில் கருடக்கொடி கொடி கொண்ட திருமால் கோவிலும், கலப்பைப் படையினை ஏந்திய பலராமன் கோவிலும் காணப்பட்டதைப் பதிவு செய்கின்றார்.

**சேடக்குடும்பி**

சேடக்குடும்பி என்பதற்குத் தமிழ் அகராதி கோயில் அருச்சகன் என்று பொருள் தருகின்றது. சேடக்குடும் பி என்பதற்கு திருவடிபிடிப்பான் என்று அரும்பதவுரையாசிரியர் பொருள் தருகின்றார்.மாதரி கண்ணகி மேல் கொண்ட அன்பினால் அடுத்த பிறவியில் திருவனந்தபுரத்தில் அரவணையில் பள்ளி கொண்ட திருமாலுக்குத் தொண்டு செய்யும் சேடக்குடும்பியின் மகளாகப் பிறந்தாள் என்பதனை,

"ஆடக மாடத்து அரவணைக் கிடந்தோன்
சேடக் குடும்பியின் சிறுமகள் ஈங்குளள்"

(வரந்தரு காதை – 51-52)

"ஆயர் முதுமகள் ஆயிழை தன்மேல்
போய பிறப்பில் பொருந்திய காதலின்
ஆடிய குரவையின் அரவணைக் கிடந்தோன்
சேடக் குடும்பியின் சிறுமகளாயினள்"

(வரந்தருகாதை 132-135)

என்ற பாடலடிகள் எடுத்துக் காட்டுகின்றன. இதன்வழி திருமால் கோவில்களில் பணி செய்ய அருச்சகர்கள் இருந்தமையை அறியலாகின்றது.

**திருமாலின் கோலம்**

திருமால் பாம்பணையில் பள்ளி கொண்டிருக்கும் கோலத்தைக் கிடந்த கோலம் என்றும், நின்று அருள் புரியும் கோலத்தினை நின்ற கோலம் என்றும் குறிப்பிடுவர். திருமாலின் இவ்விரண்டு கோலங்களையும் மாங்காட்டு மறையோன் வழி இளங்கோவடிகள் படைத்துக் காட்டுகிறார்.

"ஆயிரம் விரிந்தெழு தலையுடை அருந்திறல்
பாயல் பள்ளிப் பலர்தொழுதேத்த
விரிதிரைக் காவிரி வியன்பெருந் துருத்தித்

திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும்"

(காடுகாண்காதை – 37-40)

என்ற அடிகள் திருவரங்கத்தில் கிடந்த கோலத்தில் இருக்கும் திருமாலைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

"பகையணங்கு ஆழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையின் ஏந்தி
நலம் கிளர் ஆரம் மார்பில் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்"

(காடுகாண்காதை – 47-51)

என்ற பாடலடிகள் திருவேங்கட மலையில் சங்கு சக்கரம் ஏந்தி நின்றிருக்கும் திருமாலின் நின்ற கோலத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

**திருமாலின் முதன்மை**

சிலப்பதிகாரப் பாத்திரங்களுள் இன்றியமையாத இடம் வகிப்பவன் மாடல மறையோன் .அவன் தன்னைப் பற்றிக் குறிப்பிடும் போது,

"நீள்நிலங் கிடந்த நெடுமுடி அண்ணல்
தாள் தொழு தகையேன்"

(காடுகாண்காதை – 148-149)

என்று தான் திருமாலின் திருவடிகளை வணங்கும் தன்மை உடையவன் என்று தன்னை கூறிக் கொள்கிறான். மேலும், மதுரைக்கு செல்லும் வழியைப் பற்றிக் குறிப்பிடும் போது,

"அருமறை மருங்கின் ஐந்தினும் எட்டினும்
வருமுறை எழுத்தின் மந்திரம் இரண்டும்
ஒருமுறை யாக உளங்கொண்டு ஓதி"

(காடுகாண்காதை - 128-130)

என்று திருமாலின் எட்டெழுத்து மந்திரமான ஓம் நமோ நாராயணா என்னும் மந்திரத்தை ஓதும் படிக் குறிப்பிடுகின்றான். மேலும்,

"மற்றவை நினையாது மலைமிசை நின்றோன்
பொற்றாமரைத் தாள் உள்ளம் பொருந்துமின்
உள்ளம் பொருந்துவிர் ஆயின் மற்றவன்
புள்அணி நீள்கொடி புணர்நிலை தோன்றும்
தோன்றிய பின்னவன் துணைமலர்த் தாளினை
ஏன்று துயர் கெடுக்கும் இன்பம் எய்தி
மாண்புடை மரபின் மதுரைக்கு ஏகுமின்"

(காடுகாண்காதை 133-139)

என்ற அடிகளில் பிறவித்துயரை நீக்குபவன் திருமால் என்ற கருத்தினை மறையோன் பதிவு செய்கிறான்.

**கலைகளின் பதிவில் திருமால்**

இளங்கோவடிகள் மாதவி ஆடும் ஆடலைப் பற்றிக் குறிப்பிடும் போது முதல் பாணியாக,

மாயோன் பாணியும்

(கடலாடு காதை – 36)

என்று திருமாலுக்குரிய பாணியை சுட்டுகிறார். மேலும்,

"கஞ்சன் வஞ்சன் கடத்தற்காக
அஞ்சன வண்ணன் ஆடிய ஆடலுள்
அல்லியத் தொகுதியும் அவுணன் கடந்த
மல்லின் ஆடலும்"

(கடலாடு காதை – 46 – 49)

"வாணன் பேரூர் மறுகிடை நடந்து
நீணிலம் அளந்தேன் ஆடிய குடமும்"

(கடலாடு காதை – 54-55)

என்ற பாடலடிகளில் மாயவன் ஆடிய கூத்தாக அல்லியந்தொகுதி,மல்லாடல் கூத்து,குடக்கூத்து ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளார். அது மட்டுமல்லாது இவற்றின் வழி கண்ணன் கம்சனைக் கொன்ற புராணச் செய்தியையும், வாணாசுரனை அழித்த செய்தியையும் , மூன்றடியால் உலகளந்த செய்தியையும் குறிப்பிட்டுள்ளார்.

**அவதாரச் செய்தி**

விண்ணில் இருக்கும் இறைவன் தர்மத்தை நிலைநாட்ட மண்ணுலகில் இறங்கி வருவதை அவதாரம் என்று குறிப்பிடுவர். திருமாலின் அவதாரங்களுள் பத்து அவதாரங்களை முதன்மையாகக் குறிப்பிடுவர். அவை மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம், வாமனம், பரசுராமர், இராமர், பலராமர், கிருஷ்ணர்,கல்கி என்பவையாகும். அவற்றுள் கூர்மம், வாமனம், இராமன், பலராமன், கிருஷ்ணன் ஆகிய ஐந்து அவதாரங்கள் சிலம்பில் சுட்டடப்படுகின்றன.

**கூர்மம்**

கூர்மம் என்பது ஆமை. தேவர்களும் அசுரர்களும் அமுதம் வேண்டி பாற்கடலைக் கடைந்த போது திருமால் ஆமை வடிவம் எடுத்து அமிர்தம் கடைய துணை நின்றார். இந்நிகழ்வினை ஆய்ச்சியர் குரவையில்,

பாம்பு கயிறாக் கடல் கடைந்த மாயவன்

(ஆய்ச்சியர் குரவை 2)

“வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாள் கடல் வயிறு கலக்கினையே“

(ஆய்ச்சியர் குரவை 1 2-4)

கடல்வயிறு கலக்கியஞாட்பும்

(கால்கோட் காதை -237)

என்ற அடிகளில் காணலாகின்றது.

**வாமனம்**

திருமால் மாவலியிடம் மூன்றடி மண் கேட்டு எடுத்த அவதாரம் வாமனம். மாடல மறையோன்,

நீள்நிலங் கடந்த நெடுமுடி அண்ணல்

(காடுகாண்காதை – 148)

என்று திருமாலின் வாமன அவதாரத்தைக் குறிப்பிடுகிறார்.

“மூவுலகும் ஈரடியான் முறை நிரம்பா வகை முடியத்
தாவிய சேவடி“

(ஆய்ச்சியர் குரவை – படர்க்கைப் பரவல் 1)

என்ற அடிகளிலும் வாமன அவதாரம் சுட்டப்படுகிறது.

**இராம அவதாரம்**

திருமாலின் முழுமையான அவதாரங்களுள் ஒன்று இராம அவதாரம். இளங்கோவடிகள் புறஞ்சேரியில் கோவலனை சந்திக்கும் கோசிகன் கோவலனிடம் அவனைப் பிரிந்த புகார் இராமனைப் பிரிந்த அயோத்தி போல துன்புற்றது என்று குறிப்பிடுவதனை,

“தஞ்சமென் றருங்கான் அடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போல“

(புறஞ்சேரி இறுத்த காதை – 64-65)

என்ற அடிகளால் அறியலாகின்றது. தந்தையின் ஏவலால் இராமன் காடு சென்றான் என்பதை,

“தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்“

(ஊர்காண்காதை – 46-47)

என்று கோவலனுக்கு கவுந்தியடிகள் ஆறுதல் கூறுமிடத்துப் படைத்துக் காட்டுகிறார். மேலும் இராமன் இலக்குவனுடன் காடு சென்றதை ஆய்ச்சியர் குரவையிலும் குறிப்பிடுகிறார்.

தாவிய சேவடி சேப்பத் தம்பியொடும் கான்போந்து

(ஆய்ச்சியர் குரவை – 1)

என்ற அடி இதனை விளக்குகிறது.

**பலராமர்**

கிருஷ்ணனின் அண்ணனாகச் சுட்டப்படுவது பலராம அவதாரம். பலராமன் கண்ணனின் அண்ணன் என்பதனை,

மாயவன் தன் முன்னினொடும்

(ஆய்ச்சியர் குரவை)

என்ற அடியில் இளங்கோவடிகள் சுட்டுகிறார். மேலும் பலராமன் கலப்பைப் படை உடையவன் என்பதனை,

மேழி வலன் உயர்ந்த வெள்ளை நகரமும்

(ஊர்காண்காதை – 9)

என்ற அடியிலும், புகார் நகரில் பலராமனுக்கும் கோவில் இருந்ததை,

வால்வளை மேனி வாலியோன் கோயிலும்

(இந்திர விழவூரெடுத்த காதை – 171)

என்ற அடியிலும் விளக்கிக் காட்டுகிறார்.

**கிருஷ்ணன்**

சிலம்பில் அதிகமாகக் குறிக்கப்படுவது கிருஷ்ண அவதாரமே எனலாம். கோவலனையும் கண்ணகியையும் கவுந்தியடிகள் ஆயர் குலத்தைச் சார்ந்த மாதரியிடம் அடைக்கலமாகத் தருகின்றார். கோவலனும் கண்ணகியும்

தம் வாழ்வின் இறுதி நாட்களைக் கழித்த பகுதி ஆயர்குலம். ஆயர்கள் திருமாலை வழிபடுபவர்கள் ஆதலால் கிருஷ்ணனின் புகழைப் பாடும் களமாக ஆய்ச்சியர் குரவை அமைகிறது. கிருஷ்ண அவதாரச் செய்திகள் பலவும் இவ்விடத்தில் ஆயர்களால் போற்றிப் பாடப்படுவதாக இளங்கோவடிகள் படைத்துக் காட்டியுள்ளார்.

**குருந்த மரத்தை அடர்த்தது**

கண்ணன் தன்னை அழிக்க குருந்த மரத்தின் வடிவில் நின்ற அசுரனை அழித்தமையை,

கொல்லைப் புனத்துக் குருத்தொசித்தான்

(ஆய்ச்சியர் குரவை)

கொல்லையம் சாரல் குருந்தொசித்த மாயவன்

(ஆய்ச்சியர் குரவை)

என்ற அடிகள் சுட்டுகின்றன.

**வத்சாசுரனை அழித்தல்**

கம்சன் கண்ணனை அழிக்க அனுப்பிய அரக்கர்களுள் ஒருவன் வத்சாசுரன். கன்று வடிவில் வந்த அந்த அரக்கனைக் கண்ணன் அழித்தமையை,

கன்று குணிலாக் கனிஉதிர்த்த மாயவன்

(ஆய்ச்சியர் குரவை)

என்ற அடி சுட்டுகிறது.

**கோபியர் ஆடைகளை ஒழித்தல்**

கிருஷ்ணன் யமுனையில் நீராடிய கோபியர்களின் ஆடைகளைக் கவர்ந்தமையை,

"இறுமென் சாயல் நுடங்க நுடங்கி
அறுவை ஒளித்தான் வடிவுஎன்கோ யாம்?
அறுவை ஒளித்தான் அயர அயரும்
நறுமென் சாயல் முகம் என் கோயாம்?"

(ஆய்ச்சியர் குரவை)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

**ஞாயிற்றை மறைத்தல்**

கௌரவர்களின் தங்கை துச்சலையின் கணவன் ஜெயத்ரதன். அபிமன்யு இறக்க காரணமாக இருந்தவன். ஆகையால் அருச்சுனன் அடுத்த நாள் சூரியன் மறைவதற்குள் அவனைக் கொல்வதாக சபதம் செய்கின்றான். அடுத்த நாள் ஜெயத்ரதனை போரில் ஈடுபட விடாமல் துரியோதனன் ஒளிந்திருக்கச் செய்கிறான். ஒளிந்திருக்கும் அவனை வெளியில் கொணர்வதற்காக கிருஷ்ணர் தன்னுடைய சக்கரத்தை ஏவி சூரியனை மறைக்கிறார். சூரியன் அஸ்தமனம் ஆனதாக எண்ணி வெளி வரும் ஜெயத்ரதனை அருச்சுனன் கொல்கிறான். அருச்சுனனுக்காக சூரியனையே மறைக்கச் செய்த கிருஷ்ணனின் அன்பினை,

கதிர் திகிரியான் மறைத்த கடல் வண்ணான்

(ஆய்ச்சியர் குரவை)

என்ற அடி புலப்படுத்துகிறது.

**யசோதை கயிற்றால் கட்டுதல்**

ஞானியரின் எண்ணங்களுக்கும் கட்டுப் படாத கண்ணன் யாசோதையின் கயிற்றால் கட்டுண்டு நின்றமையை,

அசோதையார் கடைகயிற்றால் கட்டுண்கை

(ஆய்ச்சியர் குரவை)

என்ற அடியால் அறியலாம்.

**வெண்ணெய் திருடி உண்ணுதல்**

உலகை உண்ட வாயினை உடைய கண்ணன் ஆய்ச்சியரின் வெண்ணெயைத் திருடி உண்டமையை,

“உறுபசி ஒன்றின்றியே உலகு அடைய உண்டனையே
உண்டவாய் களவினால் உறி வெண்ணெய் உண்டவாய்”

(ஆய்ச்சியர் குரவை)

என்ற அடிகளால் அறியலாகின்றது.

**பாண்டவர்க்காகத் தூது செல்லுதல்**

கிருஷ்ணன் பாண்டவர்களுக்காக தூது சென்றமையை,

நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி

(ஆய்ச்சியர் குரவை)

”நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்து ஆரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நா என்ன நாவே”

(ஆய்ச்சியர் குரவை)

என்ற அடிகள் குறிப்பிடுகின்றன. மேலும் கிருஷ்ணன் பாண்டவர்க்காகத் தேர் ஓட்டியமையை,

கடல்வணன்
தேரூர் செருவும் பாடி

(கால்கோட் காதை 238 -239)

என்ற அடிகள் விளக்குகின்றன.

சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகள் சமயப்பொறையுடன் படைத்திருந்தாலும் காப்பியப் போக்கின் அடிப்படையில் அவர்காலச் சூழலின் அடிப்படையில் வைணவம் தொடர்பான கருத்துகளை மிகுதியும் பதிவிட்டிருக்கிறார் எனலாம். மன்னனை காக்கும் கடவுளான திருமாலுக்கு இணையாகப் போற்றும் தன்மை வழக்கில் இருந்ததால் மன்னனை சிறப்பிக்கும் இடத்தில் திருமாலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். மேலும் கோவலனும் கண்ணகியும் இறுதியில் தங்கிய இடம் ஆயர்குலம் என்பதால் ஆயர்களின் வழிபாட்டுக் கடவுளாகிய கண்ணனைக் குறித்தும் அவர் பாடுவது தவிர்க்க இயலாததாகிறது எனலாம்.

## மாதவியின் ஆளுமைத்திறம்

மாதவி சித்ராபதியின் மகள். கணிகையர் குலத்தில் பிறந்தவள். ஆயினும் பரத்தையர் குலத்திற்குரிய ஒழுக்கங்களைக் கொண்டு ஒழுகாமல் ஒருவனுக்கு ஒருத்தி என்ற ஒழுக்கத்தில் வாழ முயன்று வெற்றி பெற்றவள். மாதவி பாத்திரத்தினை அறிவு ஆளுமை, நுண்ணறிவுத்திறன், சிந்தனைத் திறன் ஆகிய பண்புநலன்கள் கொண்டதாக இளங்கோவடிகள் படைத்துக் காட்டியுள்ளார்.

### அறிவு ஆளுமை (Intellectual Personality)

புதியதாக ஏதேனும் ஒன்றினை அறிந்து கொள்வதே அறிதலாகும். இத்திறனின் வளர்ச்சி நிலையே அறிவுத்திறனாகக் கருதப்படுகின்றது. "ஒருவரின் அறிவுப்புலமையை அவர்களது நடத்தைகள் மற்றும் சொல்லாற்றலின் வாயிலாக அறிந்து கொள்ளலாம். பகுத்துணர்ந்து ஒரு செயலினை நுட்பமாக செய்கின்ற முறையே அறிவு ஆளுமை (Intellectual Personality) ஆகும்"[1] என்று உளவியலார் அறிவுஆளுமை குறித்து விளக்கம் தருவர்.

மாதவி தன் இலக்கை அடைய கையாளுகின்ற ஆளுமைத்திறனுள் ஒன்றாக அறிவுஆளுமை (Intellectual Personality) அமைகிறது. அவள் தனது நுண்ணறிவுத்திறனால் சமூகத்தைப் புரிந்து, சூழலுக்கு ஏற்ப செயல்படுகின்ற தன்மை கொண்டவளாக அமைகின்றாள்.

### நுண்ணறிவு (Intelligence)

நுண்ணறிவுத் திறனே ஒருவரது ஆளுமைப் பண்பில் பெரும்பங்கு வகிக்கின்றது. பல்வேறு விவரங்களை எளிதில் அறிந்து புரிந்து கொண்டு ஒருங்கிணைந்து முடிக்கும் ஆற்றலே நுண்ணறிவு (Intelligence) ஆகும். நுண்ணறிவு என்னும் சொல் உருவாக்கத்தினை "அரிஸ்டாட்டிலால் பயன்படுத்தப் பட்ட கிரேக்க வார்த்தையை சிசரோ (Cicero) இலத்தீனில்

மொழிபெயர்த்தார். அந்த இலத்தீன் வார்த்தை யிலிருந்து Intelligence என்னும் ஆங்கிலச் சொல் தோன்றியது. இவை தமிழில் நுண்ணறிவு என்றும் வழங்கப்படுகின்றது"[2] என்று குறிப்பிடுவர்.

### நுண்ணறிவின் வகைகள் (Kinds Of Intelligence)

மனிதன் தேவைகளுக்குத் தக்கவாறு தனது சிந்தனையை நனவுடன் பயன்படுத்துகின்ற திறனே நுண்ணறிவாகும். ஒருவன் தன்னுடைய மனவெழுச்சிகளால் பாதிக்கப்படாமல் தான் மேற்கொண்ட செயல்களை முழுமூச்சுடன் தன் அறிவுத்திறனால் பொருந்திச் செயலாற்றுகின்ற திறனே அவனது நுண்ணறிவாக (Intelligence) கருதப்படுகின்றது. தார்ண்டைக்கின் கூற்றுப்படி நுண்ணறிவானது பொதுவான ஆற்றல் அல்ல. நுண்ணறிவானது வேறுபட்ட மூன்று திறன்களைத் தன்னுள் கொண்டுள்ள முறையினை, "கருத்தியல் நுண்ணறிவு (Abstract Intelligence), பொறியியல் சார்ந்த நுண்ணறிவு (Mechanic Intelligence), சமூக நுண்ணறிவு(Social Intelligence)"[3] என்ற வகைகளில் குறிப்பிடுவார். கருத்துக்களையும், குறியீடுகளையும் அறிந்து கொள்ளும் திறனே கருத்தியல் நுண்ணறிவாகும். இயந்திரங்களின் அமைப்பை அறிந்து அவற்றை இயக்க உதவும் ஆற்றல் பொறியியல் சார்ந்த நுண்ணறிவாகும். பிறர் மனமறிந்து சமூக வாழ்க்கையில் திறனுடன் செயல்படத் தூண்டுகின்ற அறிவே சமூக நுண்ணறிவாகும். மனிதனின் செயல்களில் நுண்ணறிவின் இம்மூன்று வகைகளுமே காணப்படுகின்றன எனலாம்.

### சமூக நுண்ணறிவு(Social Intelligence)

நுண்ணறிவாளன் (Intelligence) அனைவரையும் தன்பால் ஈர்க்கக் கூடிய திறன் உடையவனாக இருப்பான். நுண்ணறிவின் வகைகளுள் ஒன்றாக சமூகநுண்ணறிவைக் (Social Intelligence) குறிப்பிடும் தார்ண்டைக், "தன்பால் அனைவரையும் ஈர்க்கும் திறன் கொண்டு சமூகத்துடன் இணைந்து வாழ்தலே சமூகநுண்ணறிவு"[4] என்று குறிப்பிடுகின்றார். பிறருடன் சுமூகமாக

உறவு கொள்கின்ற சமூக நுண்ணறிவு உடைய மாந்தராக மாதவி திகழ்வதனைக் காணமுடிகிறது.

மாதவி பிறப்பால் பரத்தையர் குலத்தைச் சார்ந்தவள்.இருப்பினும் அவளது மனம் கோவலன் ஒருவனை மட்டுமே ஏற்றுக் கொண்டது. அவனுடன் மட்டுமே அவள் அன்பால் வாழ்கிறாள். கோவலனின் இறப்பின் பின் அவள் மேற்கொள்ளும் முடிவுகள் அவளின் சமூக நுண்ணறிவிற்குச் சான்றாக அமைகின்றன. மாதவி சமூகத்துடன் சுமூகமான உறவுகொண்டவள் என்பதனை விட சமூகத்தினரின் மனதினை உணர்ந்து கொள்ளக்கூடிய திறன் பெற்றவள் என்று குறிப்பிடலாம். கோவலன் ஒருவனுக்காக மட்டுமே மாதவி வாழந்தாலும் அவள் வாழ்ந்த சமூகம் அவளைக் கோவலனின் மனைவியாக ஏற்றுக் கொள்ளாது. அவளின் மனமோ கோவலனைத் தாண்டி வேறு ஒருவரையும் ஏற்றுக் கொள்ளவில்லை. இத்தகைய சூழலில் தன் மனத்தின் திண்மையைக் காட்டுவதாக அவள் துறவு பூணுகின்றாள். தான் மட்டும் அல்லாது தன் மகள் மணிமேகலையையும் துறவு பூணுச் செய்கின்றாள்.

“மற்றது கேட்டு மாதவி மடந்தை
நற்றாய் தனக்கு நற்றிறம் படர்கேன்
மணிமேகலையை வான் துயர் உறுக்கும்
கணிகையர் கோலம் காணா தொழிகெனக்
கோதை தாமம் குழலொடு களைந்து
போதித்தானம் புரிந்தறங் கொள்ளவும்“

(நீர்ப்படைக் காதை 103 – 109 )

என்ற அடிகள் வாயிலாக மாதவி தன் குலத்தொழிலை மேற்கொள்ளாததோடு மணிமேகலையையும் துறவு பூணச் செய்வதனையும் அறியமுடிகிறது. தான் வாழ்ந்த சமூகத்தின் எண்ண ஓட்டங்களை முழுமையாக அறிந்தமையாலேயே மாதவி இத்தகைய ஒரு முடிவினை எடுக்கின்றாள் எனலாம்.இது அவளின் நுண்ணறிவின் வெளிப்பாடு எனலாம்.

**மாதவியின் நுண்ணறிவுப் பண்புகள்**

மாதவியின் நுண்ணறிவு பண்புகளைப் பின்வருமாறு சுட்ட இயலுகின்றது.

- இலக்குகளை அடைய தகுந்த முயற்சியை மேற்கொள்கின்றவள்.
- தன்மன எழுச்சிகளைச் சமச்சீராக வைத்திருப்பவள்.
- சூழ்நிலைக்கேற்ப பிறரிடம் பழகி நட்பு கொள்பவள்.
- தன்னுடைய பிரச்சனைகளை எளிதாக தீர்க்கக்கூடிய ஆற்றல் உடையவள்.

இத்தகைய பண்புகளை உடையவர் சிறந்த நுண்ணறிவாளராகக் கருதப்படுகின்றனர்.

**அறிவுத்திறன் வளர்ச்சி ( Cognitive Development )**

அறியாத ஒன்றினை அறிவதே அறிவாகும். அறிவுத்திறன் என்பது சிந்தனை, புலன்காட்சி, திட்டமிடல், தெளிவுசெய்தல் போன்ற உளச் செயல்களைக் குறிக்கின்றன. அறிவுத் திறன் வளர்ச்சியை, "தனி ஒருவர் தனது சுற்றுப்புறச் சூழ்நிலையைப் புரிந்து கொள்ளக்கூடிய மனவளர்ச்சி (அ) திறன் வளர்ச்சியே அறிவுத்திறன் வளர்ச்சி"[5] என்று குறிப்பிடுவர். பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் போது நம் உள்ளம் பல சிறப்பான செயல்களில் ஈடுபடுவதே அறிவுத்திறன் வளர்ச்சியாகும். அறிவுத்திறன் வளர்ச்சியின் பல்வேறு கூறுபாடுகளை,

- சிந்தனைத் திறன் (Thinking Power)
- கற்பனை செய்தல் (Imagination)
- ஆராய்ந்தறிதல் (Reasoning)
- தொடர்புபடுத்துதல் (Association)"[6]

என்ற முறைகளில் குறிப்பிடுவர். ஒரு செயலைச் சிந்திப்பதில் தொடங்கி அறிவானது படிப்படியாக வளர்ச்சியடைகின்றது.

**சிந்தனைத் திறன் (Thinking Power)**

சிந்தனை நமக்குள் எழும் பேச்சு என்று வாட்சன் குறிப்பிடுகின்றார். சிந்தனைத் திறனானது வெளியுலகச் செயல்களால் (அ) தூண்டல்களால் நம் உள்ளத்தில் ஏற்படும் உள்ளார்ந்த, தொடர்ந்து நிகழ்கின்ற மனச்செயல் ஆகும். அறிவுத்திறன் சார்ந்த செயல்களில் ஒன்றாக சிந்தனைத்திறன் செயல்படுகின்றது. ஏதேனும் ஒரு குறிக்கோள் (அ) முடிவை அடைவதற்கான முயற்சியை சிந்தனைத்திறன் மேற்கொள்கின்றது. எந்த ஒரு செயலையும் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்து அதன் நன்மை தீமைகளை ஆராய்ந்து பார்க்கிறது. மாதவி தனது குறிக்கோளை நிறைவு செய்வதன் பொருட்டு நன்மை தீமைகளை ஆய்ந்து ஆழ்ந்து சிந்திக்கின்ற மனத்தினை உடையவளாகத் திகழ்கின்றாள்.

தான் கோவலனுக்கு மட்டுமே சொந்தம் என்ற உறுதி மாதவியிடம் இருந்தது. கோவலனுடன் கானல்வரிப்பாடலால் நேர்ந்த பிரிவைப் போக்க மாதவி வயந்தமாலையிடம் கடிதம் கொடுத்து அனுப்புகிறாள். கோவலன் அக்கடிதத்தினை ஏற்றுக் கொள்ளாததோடு வயந்தமாலையிடம் மாதவியினைக் கடித்துரைக் கின்றான். அந்நிலையில் கோவலனுடனான பிரிவு அவளைப் பலவகையில் சிந்திக்கத் தூண்டுகிறது. பின்னர் அவன் கண்ணகிடன் ஊரை விட்டு சென்றதை அறிந்த நிலையில் மனம் தெளிந்தவளாகி இரண்டாம் முறையாகக் கடிதத்தினை கோசிகனிடம் கொடுத்து அனுப்புகிறாள்.

“அடிகள் முன்னர் யான்அடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனங்கொளல் வேண்டும்
குரவர் பணி அன்றியும் குலப்பிறப்பாட்டியோடு
இரவிடைக் கழிதற்கு என்பிழைப் பறியாது
கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி“

(புறஞ்சேரி இறுத்த காதை 87 – 92)

என்ற மாதவியின் அடிகள் மாதவியின் அறிவின் வெளிப்பாட்டிற்குச் சான்றாக அமைகின்றன. கோவலனைத் தன் உரிமையாகக் கருதிய மாதவி தான் அவன் உடன் வாழ்ந்தாலும் மணிமேகலையை ஈன்றாலும் தான் குலப்பிறப்பாட்டி அல்ல என்பதனை உணர்கின்றாள். அதனை வெளிப்படுத்தும் முகமாகவே அவளது கடிதம் அமைகின்றது.

அவளின் முதல் கடிதம் கண்டு ,
“ஆடல் மகளே ஆதலின் ஆயிழை
பாடு பெற்றன அப்பைந்தொடி“

(வேனிற்காதை 109 – 110)

என்று கூறிய கோவலனை,

“தன் தீது இலளெனத் தளர்ச்சி நீங்கி
என்தீது என்றே“

(புறஞ்சேரி இறுத்த காதை 94-95)

என்று உணரச் செய்வதாக அவளது கடிதம் அமைகிறது. மாதவியின் சிந்தனைத்திறன் வளர்ச்சி நிலையை இதன்வழி அறியலாகின்றது.

**கற்பனை செய்தல் (Imagination)**

ஒருவரின் சிந்தனைத்திறனுக்கு ஏற்றவாறு அவனது கற்பனையாற்றல் (Imagination Power) வளர்கின்றது எனலாம். உளவியலாளர் கற்பனையை (Imagination) “பிம்பங்கள் அல்லது சாயல்களின் துணைகொண்டு நிகழும் சிந்தனை”[7] என்று குறிப்பிடுகின்றனர். கற்பனை இரண்டு வகையாகக் குறிப்பிடப்படுகின்றது. அவை

- மீள் ஆக்கக் கற்பனை (Reproductive Imagination)
- ஆக்கக் கற்பனை (Productive Imagination)

என்பவையாகும். முன்பு அனுபவித்த நிகழ்ச்சியினை அகக்கண் முன் கொணர்ந்து உணர்வது மீள்ஆக்கக்கற்பனை ஆகும். இக்கற்பனைத் திறன்

மகிழ்வான நிகழ்ச்சியினை மீண்டும் அனுபவிக்கத் தூண்டுகின்றது. முன்னைய அனுபவங்களில் இருந்து பெறப்பட்ட எண்ணங்களை புதிய கோணத்தில் அமைத்தல் ஆக்கக் கற்பனை ஆகும். இக்கற்பனைத் திறன் மனிதனின் அறிவுத்திறனை வளர்க்கின்றது. வெவ்வேறு சூழல்களில் கற்பனை செய்கின்ற மனிதனின் அறிவுத்திறன் அவனது தேவைகளுக்கு ஏற்ப அமையும் எனலாம்.

மாதவியிடம் இவ்வாக்க் கற்பனையைக் காண முடிகிறது. மாதவி கோவலனைத் தனக்குரியவனாகக் கொண்டு வாழ்கின்றாள். கோவலன் பிரிந்த நிலையில் தன் நிலையினை அகக் கண்களால் கற்பனை செய்து பார்க்கின்றாள். அதன் விளைவாகவே குலப் பிறப்பாட்டிக்கு இருக்கக் கூடிய உரிமை தனக்கு இல்லை என்ற முடிவிற்கு வருகின்றாள். கண்ணகியை குலப்பிறப்பாட்டி என்று சொல்லும் அந்த சொல்லில் தனக்கான உரிமை அது இல்லை என்ற அவளது மனநிலையை உணரலாகின்றது.

**ஆராய்ந்தறிதல்(Reasoning)**

ஆராய்தல் குறித்து,

"ஆய்ந்தாய்ந்து கொள்ளாதன் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரம் தரும்" (குறள்.792)

என்ற வள்ளுவரின் வாக்கானது ஆய்வின் தன்மையை ஆழப்படுத்துகின்றது. எந்த ஒரு செயலினையும் நுட்பமாக அறிந்திருத்தல் வேண்டும். இத்தகைய நுண்ணிய அறிவானது நம்மிடையே ஆய்வின் தன்மையை மேம்படுத்தும். மாதவியின் அறிவுத் திறன்களுள் ஒன்றாக ஆராய்ந்தறிதல் அமைகின்றது. கோவலன் தன்னை விட்டு நீங்கிய நிலையில் மாதவி தன்னுடைய முதல் கடிதத்தினை எழுதுகின்றாள்.

"தளைவாய் அவிழந்த தனிப்படு காமத்து
விளையா மழலையின் விரித்துரை எழுதி"

(வேனிற் காதை 66-67)

என்ற நிலையில் அக்கடிதம் அமைகின்றது. அதன் பின்னர் மாதவி விடுதலறியா விருப்பினனாக இருந்த கோவலனின் மன மாற்றத்தினையும்

தன்னுடைய நிலையையும் ஆராய்ந்து அறிந்த தன்மையாலே அவனிடம் மன்னிப்பு வேண்டி இரண்டாம் கடிதத்தினை எழுதுகின்றாள். அக்கடிதம் மாதவி தீங்கு அற்றவள் என்பதனை கோவலனுக்கு உணர்த்துவதாக அமைகின்றது. தன் நிலையினைத் தெளிவாக ஆராய்ந்து அறியும் ஆற்றல் உடையவளாக மாதவி இருப்பதற்கு இக்கடிதங்களே சான்றாக அமைகின்றன.

**தொடர்புபடுத்துதல் (Association)**

நினைவாற்றல் மிகுந்தவர்களிடம் தொடர்பு படுத்தும் ஆற்றல் காணப்படும். ஒரு செய்தியை அதனோடு தொடர்புபடுத்திக் காணும் போது ஏதேனும் ஒரு புதிய தகவலை நாம் பெறுவதே தொடர்பு படுத்துதலின் வெற்றியாகும். மாதவியின் அறிவுத் திறன்களுள் ஒன்றாக இத் தொடர்புபடுத்தும் ஆற்றல் (Association) திகழ்கின்றது. மாதவியின் இவ்வாற்றல் கோவலனின் அன்புத்திறனை அளந்து அறிகின்ற துலாக்கோலாக செயல்படுகின்றது என்று குறிப்பிடலாம். தொடர்புபடுத்துகின்ற மாதவியின் ஆற்றல் அவளது நினைவுத்திறனை வளர்ப்பதாகவும், கோவலன் அவளுடன் பழகிய நாட்களை நினைத்துப்பார்ப்பதற்கு ஏதுவாகவும் அமைகின்ற முறையினை அறிய முடிகின்றது.

கோவலன் மாதவியிடம் இருந்து மீண்டு கண்ணகியை நாடிச் சொல்கின்றான். முதல் கடிதத்திற்கு அவன் பதில் அளிக்காத நிலையில் மாதவி இரண்டாம் கடிதம் எழுதுகின்றாள். அக்கடிதத்தில் மாதவி தன் கூந்தலால் மண்பொறி இலச்சினை பொறிக்கின்றாள். அது கோவலனுக்குத் தன்னுடன் வாழ்ந்த காலங்களை நினைவு படுத்தும் என்று எண்ணுகிறாள். அதில் வெற்றியும் அடைகிறாள்.

“போதவிழ் புரிகுழல் பூங்கொடி நங்கை
மாதவி யோலை மலர்க்கையின் நீட்ட
உடன் உறை காலத் துரைத்த நெய்வாசம்
குறுநெறிக் கூந்தல் மண்பொறி உணர்த்திக்
காட்டியது ஆதலின் கைவிடல் ஈயான்“

(புறஞ்சேரி இறுத்த காதை 81 – 85)

என்ற பாடலடிகள் இதனை விளக்குகின்றன.

**தற்காப்பு இயங்குமுறைகள்(Defense Mechanism)**

நம்மைச் சூழ்ந்து நிகழ்கின்ற நிகழ்வுகள் அனைத்தும் நம் மனதிற்கு என்றும் நிறைவையே அளிக்கும் என்று குறிப்பிட இயலாது. மனம் துன்பமடையும் சூழலில் தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள முயல்கின்றது. இதனையே உளவியலாளர் தற்காப்பு இயங்குமுறைகள் (Defense Mechanism) என்று குறிப்பிடுகின்றனர். கோவலன் மீது கொண்ட அதீத காதல் அன்பினால் மாதவி சிந்தை தடுமாறும் அளவிற்கு துன்ப உணர்வுக்கு ஆட்படுகின்றாள். இத்துன்ப உணர்விலும் தன் காதல் மனதை அமைதிப்படுத்திக் கொள்கின்ற அறிவுத்திறன் பெற்றவளாக மாதவி சித்தரிக்கப்பட்டுள்ளாள். மனித மனம் மனச்சிக்கல்களிலிருந்து தற்காத்துக் கொள்ள கையாளும் உத்திமுறைகளை பின்வருமாறு சுட்டலாம்.

- பதிலீடு (அ) மடைமாற்றம் (Sublimation)
- அறிவார்ந்த செயல்பாடு (Rationalisation)
- புறத்தேற்றம் (Projection)

இவற்றுள் மாதவி மடைமாற்றம் என்ற தற்காப்பு இயங்குமுறையினை மேற்கொள்வதனைக் காண முடிகிறது.

**பதிலீடு (அ) மடைமாற்றம்(Sublimation)**

தற்காப்பு இயங்குமுறைகளுள் ஒன்றே பதிலீடு (அ) மடைமாற்றம் என்பதாகும். ஒன்றின் மீது நாம் கொண்டுள்ள உணர்வின் வேகத்தை மாற்றி பிறிதொன்றில் செலுத்துவதே மடைமாற்றம் ஆகும். பதிலீடு (அ) மடைமாற்றம் பற்றி உளவியலாளர், “மனிதன் ஒருவன் தன்னிடம் ஒரு குறைபாடு இருப்பதாக உணர்ந்து அதனைப் போக்கிக் கொள்ள முயல்கிறான். அது முடியாத போது அதற்கு பதிலாக வேறொரு புதிய ஆற்றலைப் பெருக்கிக் கொள்ள முயல்கிறான்.”[8] என்று குறிப்பிடுகின்றனர்.கோவலனின் இறப்பிற்குப் பிறகு மாதவி தன்னைத்தானே

ஆற்றிக் கொண்டு தன் மனநிலையை மடைமாற்றம் செய்து கொள்கின்றாள். இழப்பினை ஈடுசெய்யும் விதமாக உலகத்தாரால் போற்றப்படக்கூடிய ‘துறவு’ என்ற வலிமையான செயலினைப் பின்பற்றி தன்னைத் தானே தற்காத்துக் கொள்கிறாள். மாதவியின் துன்பம் துறவு என்ற செயலால் மடைமாற்றம் செய்யப்படுகின்றது என்பதனை அறியலாகின்றது.

இளங்கோவடிகள் மாதவி பாத்திரத்தினை மனத்திண்மை மற்றும் நுண்ணறிவு உடைய பாத்திரமாகப் படைத்துள்ளார். மாதவியின் சிந்தனைத் திறன், ஆராயும் ஆற்றல், தொடர்புபடுத்தி உரைக்கின்ற ஆற்றல் ஆகியவை அவளது அறிவுத்திறன் வளர்ச்சியைப் புலப்படுத்துகின்றன. மேலும் அவள் தன்னையும் தன் மனதையும் தற்காத்துக் கொள்கின்ற திறன் படைத்தவளாகத் திகழ்கின்றாள். தனது சூழல்களைத் தடுமாற்றம் இல்லாது தன்னிலை அறிவுடன் உணர்ந்து செயல்படுகின்ற தன்மை உடையவளாக அமைகின்றாள் என்பதனை இதன் வழி அறிந்து கொள்ள இயலுகின்றது.

**சான்றெண் விளக்கம்**


1. ஆர். மகாதேவன்(ப.ஆ.), கல்வி உளவியல், ப.121
2. மேலது,ப.121
3. மேலது, மு.நூ, ப.35
4. பெ.பாஸ்கரன், கல்வி உளவியலும் மனித வள மேம்பாடும்,ப.53
5. இ.பா. வேணுகோபால், கல்வி உளவியல், ப.102
6. எச்.எம்.ஆர். இதயம் ஓர் விளைநிலம்,ப.95
7. வி.முத்து, பல்துறை நோக்கில் தமிழிலக்கியம், ப.210
8. இரா.காஞ்சனா, இலக்கியமும் உளவியலும்,ப.154

---

## சிலம்பில் வணிகக் களங்கள்

சிலப்பதிகாரம் தமிழில் எழுந்த முதல் காப்பியம் என்ற பெருமைக்கு உரியது. சங்க இலக்கியங்கள் முடியுடை மூவேந்தர் மற்றும் குறுநில மன்னர்களின் பெருமைகளை விளக்குவனவாக அமைய குடிமக்கள் பற்றிய முதல் காப்பியமாக எழுந்த பெருமை சிலம்பிற்கு உரியது. வணிக குலத்தைச் சார்ந்த கோவலன் கண்ணகியின் வாழ்வில் ஏற்பட்ட சிக்கலை விளக்குவதாக அமைந்ததால் சிலம்பில் வணிகக் களங்கள் குறித்த செய்திகளை மிகுதியும் அறியலாகின்றது. அவற்றை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

### புகாரின் சிறப்பு

புகார் நகரம் புகழ் மிக்க அரசரையும் விரும்பிப் போற்றுகின்ற செல்வத்தைக் கொண்ட வணிகப்பெருமக்களையும் மிகுதியாகக் கொண்டு விளங்கியது. பெறுவதற்கு அரிய பலநாட்டுப்பண்டங்களையும் தன்னகத்தே கொண்டதாகத் திகழ்ந்தது. கடல்வழி வணிகத்தாலும் , தரைவழி வணிகத்தாலும் புகாரில் பல்வேறான பொருட்கள் நிறைந்திருந்தன என்பதனை,

‘‘முழங்குகடல் ஞாலம் முழுவதும் வரினும்
வழங்கத் தவாஅ வளத்தது ஆகி
அரும்பொருள் தரூஉம் விருந்தின் தேஎம்
ஒருங்கு தொக்கன்ன உடைப்பெரும் பண்டம்
கலத்தினும் காலினும் தருவனர் ஈட்ட’’

(மனையறம் படுத்த காதை 3-7)

என்ற பாடலடிகளால் அறியலாகின்றது.

### வணிகர்களைச் சுட்டும் சொற்கள்

பழந்தமிழகத்தில் நடை பெற்ற வணிகங்களை இரண்டு நிலைகளில் காணமுடிகின்றது. ஒன்று உள்நாட்டு வணிகம் , மற்றொன்று வெளிநாட்டு வணிகம். வெளி நாட்டு வணிகம் தரை வழியாகவும் , கடல் வழியாகவும் நடைபெற்று வந்துள்ளது. வணிகர்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று வணிகம் செய்துள்ளனர். இவ்வணிகக் கூட்டம் சாத்து என்று அழைக்கப்பட்டது. தரை வழி வணிகம்

செய்தவர்கள் தலைவன் மாசாத்துவான் என்றும் , கடல் வழி வாணிகம் செய்தவர்கள் தலைவன் மாநாய்கன் என்றும் அழைக்கப்பட்டனர்.

இளங்கோவடிகள் கண்ணகியை அறிமுகம் செய்யுமிடத்து,

மாகவான் நிகர் வண்கை மாநாய்கன் குலக் கொம்பர்
(மங்கல வாழ்த்துப்பாடல் - 24)

என்றும் , கோவலனை அறிமுகம் செய்யுமிடத்து,

வருநிதி பிறர்க்கு ஆர்த்தும் மாசாத்து வான் என்பான்
(மங்கல வாழ்த்துப்பாடல் - 33)

என்றும் அறிமுகம் செய்து வைக்கின்றார்.

**வணிகர்களுக்கான சிறப்புகள்**

வணிகர்கள் அரசருக்கு அடுத்த சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தனர் என்பதனைக் கோவலன் தன்னுடைய குலக் கடமைகளைச் செய்தான் என்பதனைக் கூறுமிடத்து,

‘‘அரசர் பின்னோர்க்கு அருமறை மருங்கின்
உரிய எல்லாம் ஒருமுறை கழித்தாங்கு’’
(கொலைக்களக் காதை 44-45)

என்று இளங்கோவடிகள் சுட்டுகிறார்.

கோவலன் கண்ணகி திருமணத்தை யானைப் பிடரியிலே அழகிய அணி புனைந்த மகளிரை இருக்க வைத்துப் புகார் நகரில் உள்ளவர்களுக்கு இவர்களது திருமணச் செய்தியைத் தெரிவித்தனர் என்பதனை,

‘‘யானை எருத்தத்து அணிஇழையார் மேல்இரீஇ
மா நகர்க்கு ஈந்தார் மணம்’’
(மங்கல வாழ்த்துப்பாடல் 43 -44)

என்ற பாடலடிகளால் அறியலாகின்றது.இதனால் மன்னர்களுக்கு இணையான சிறப்பினை வணிகர்கள் பெற்றிருந்தனர் என்பதனை அறிய முடிகின்றது. மேலும் ,

பெருங்குடி வாணிகர் மாட மறுகும்

(இந்திர விழவூர் எடுத்த காதை 41)

என்பதால் வணிகர்களுக்கென்று பெரிய மாட மாளிகைகள் அமைந்த தனிப்பகுதி இருந்தது என்பதனை அறியலாகின்றது. மேலும் வணிகர்களுக்கு எட்டி என்ற பட்டங்களும் வழங்கிச் சிறப்பித்தமையை,

எட்டி சாயலோன் இருந்தோன்

(அடைக்கலக் காதை – 163)

என்ற பாடலடியால் அறியலாகின்றது. பொற்கொல்லருக்கும் தனிச்சிறப்பு அளித்தமையை,

''கண்ணுள் வினைஞர் கைவினை முற்றிய
நுண்வினைக் கொல்லர் நூற்றுவர் பின்வர
மெய்ப்பை புக்கு''

(கொலைக்களக் காதை – 104 – 106)

என்ற பாடலடிகள் விளக்கிக் காட்டுகின்றன.

**தமிழகத்தில் இருந்த பிற நாட்டு வணிகர்கள்**

தமிழகத்தில் வேறு நாட்டிலிருந்து வந்து வணிகம் செய்தவர்களும் இருந்துள்ளனர். அவர்களுக்கென்று கடற்கரையில் தனியாகக் குடியிருப்புகளும் இருந்துள்ளன.

''கலந்தரு திருவிற் புலம் பெயர் மாக்கள்
கலந்தினி துறையும் இலங்கு நீர் வரைப்பு''

(இந்திர விழவு ஊர் எடுத்த காதை 11-12)

என்ற பாடலடிகள் மரக்கலங்களில் பிற நாடுகளில் இருந்து வந்த கப்பலோட்டிகளைக் குறிப்பிடுகின்றன.

**உள்நாட்டு வெளிநாட்டுவாணிபம்**

புகார் நகரில் உள்நாட்டு வாணிகம் மற்றும் வெளி நாட்டு வாணிகம் இரண்டும் சிறப்புற நடைபெற்றுள்ளது. மகளிர் மேற்றிசை நாடுகளில் இருந்து வந்த வெண்மையான அயிர் என்னும் பொருளுடன் கீழ்த்திசை நாட்டுக் கருமை நிற அகிலினை ஒன்றாகக் கூட்டி நறுமணப்புகை கொண்டுள்ளனர். வடமலையிலிருந்து கொணர்ந்த வட்டக்கல்லில் தென்மலை பொதிகையில் இருந்து கொணர்ந்த சந்தனக் கட்டையை அரைத்துப் பூசியுள்ளனர்.

‘‘குடதிசை மருங்கின் வெள்அயிர் - தன்னொடு
குணதிசை மருங்கின் கார் அகில் துறந்து
வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்துத்
தென்மலைப் பிறந்த சந்தனம் மறுக’’

(அந்தி மாலை சிறப்பு செய்காதை 35 -38)

என்ற பாடலடிகள் இதனை விளக்குவதாக அமைகின்றன.

**பண்டக சாலை**

பொருட்களை சேகரித்து வைக்கும் பண்டகசாலை புகார் நகரில் இருந்துள்ளது. வெளி நாட்டில் இருந்து வந்தவர்கள் தம் பெயர் எழுதிய அடையாள எழுத்தினைச் சின்னமாக அமைத்த பல எண்களைப் பொதிகளில் இட்டுள்ளனர்.

‘‘வம்ப மாக்கள் தம்பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப்பல் பொதிக்
கடைமுக வாயிலும்’’

(இந்திர விழவூரெடுத்த காதை 111 – 113)

என்ற படலடிகள் பொதிகளில் இலச்சினை இடும் பழக்கம் இருந்தமையைக் காட்டுகின்றன.

**கொடிகட்டி அறிவித்தல்**

கடற்கரையில் பிற நாடுகளில் இருந்து மரக்கலங்கலங்களில் வந்துஇ பொருட்களைக் கொணர்ந்து விற்பனை செய்வோர் இன்ன பொருள் இங்கே கிடைக்கும் என்று கொடிகள் கட்டி அறிவித்தமையை,

"கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
வேலைவா லுகத்து விரிதிரைப் பரப்பிற்
கூலமருகிற் கொடியெடுத்து நுவலும்"

(கடலாடு காதை 130 -132)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன.

**தொழில்கள்**

சிலம்பு அக்காலமக்கள் செய்து வந்த பல்வேறு தொழில்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது. இந்திர விழவு ஊர் எடுத்த காதையும் , ஊர்காண் காதையும் இதற்குச் சான்றாக அமைகின்றன.

மருவூர்ப்பாக்கம் மற்றும் பட்டினப் பாக்கம் எத்தகைய தொழில் புரிவோரைக் கொண்டு விளங்கியது என்பதனை இளங்கோவடிகள் பட்டியலிட்டுக் காட்டுகின்றார்.

(இந்திர விழவு ஊர் எடுத்த காதை 9 - 58)

**மருவூர்ப்பாக்கம்**

வண்ணக் குழம்பு, சுண்ணப் பொடி, மணச்சாந்து, பூ, நறுமணப்பொருட்கள் ஆகியவை நகர வீதியில் விற்கப்பட்டன.

பட்டு, மயிர் , பருத்தி இவற்றால் நுண்மையான கைத்தொழில் செய்யும் காருகர்களுக்குத் தனியாக இருக்கைகள் அமைந்திருந்தன.

பட்டு, பவளம் , சந்தனம் , அகில் , முத்து, மணி, பொன் இவை அளவில்லாது பெரிய வணிக வீதிகளில் நிறைந்திருந்தன.

எண்வகைக் கூலங்கள் கூலக்கடைத் தெருவில் தனித்தனியே குவிந்து கிடந்தன.

பிட்டு வாணிகம் செய்பவர் , அப்பம் சுடுபவர் , கள் விற்பவர் , மீன் விற்பவர் , உப்பு விற்பவர் , வெற்றிலை விற்பவர் , பஞ்ச வாசம் விற்பவர் , ஊன் விற்பவர் , எண்ணெய் வணிகர் ஆகியோர் கடைத்தெருக்களில் நிறைந்திருந்தனர்.

வெண்கலத்தில் வேலை செய்யும் கன்னார் , செம்பிலே பாத்திரம் செய்பவர் , மரவேலை செய்யும் தச்சர் , கொல்லர் , சித்திரக்காரர் , மண்பொம்மை சிலை செய்பவர்கள் , பொன்னில் வேலை செய்யும் தட்டார் , இரத்தின வேலை செய்பவர் , தையற்காரர் , தோலினைத் தைக்கும் செம்மார் , துணியாலும் கிடேச்சுக் கட்டையாலும் பலவகை உருக்கள் செய்பவர் போன்றோர் மருவூர்ப்பாக்கத்தில் இருந்தனர் என்பதால் அங்கு நிலவிய தொழில்களையும் , தொழில் புரிவோர் எவ்வாறு அழைக்கப் பட்டனர் என்பதனையும் அறிய முடிகின்றது.

**பட்டினப்பாக்கம்**

பட்டினப்பாக்கத்தில் உழவர்கள் , ஆயுர்வேத மருத்துவர்கள் , காலக்கணிதர்கள் ஆகியோர் பகுதி பகுதியாக வாழக்கூடிய இடங்கள் இருந்தன.

மணிகளைக் குயிற்றுவோர் , வளைகளை அறுத்து இயற்றுவோர் பெரு வீதிகளில் வாழ்ந்தனர்

அரசனை நின்று பாடும் சூதர் , அமர்ந்து போற்றும் மாகதர் , நேரத்தைக் கணிக்கும் நாழிகைக் கணக்கர் , கூத்தர் , ஏவல் தொழில் செய்வோர் ஆகியோர் தனித்தனியான இடங்களில் வசித்தனர்.

**ஊர்காண்காதை**

ஊர்காண் காதை செல்வர் , அரசர் வீதி, கலைத் தொழிலில் ஈடுபட்டிருப்போர் வீதி, அங்காடி வீதி, இரத்தினக் கடைத்தெரு, பொன்கடைத்தெரு, அறுவை வீதி, கூல வீதி ஆகியவை தனித்தனியே இருந்தமையைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

**பெண்கள் கள் விற்றல்**

மகளிர் கள் விற்றமையை வேட்டுவ வரி எடுத்துக் காட்டுகிறது.

கள் விலையாட்டி மறுப்பப் பொறா மறவன்

(வேட்டுவ வரி 13)

என்ற பாடலடி கள் விற்பவள் மறவனுக்குக் கள் கொடுக்க மறுத்தமையைச் சுட்டுகிறது.

புகார் மதுரை நகரங்கள் வணிகத்தில் முதலிடம் வகித்துள்ளன. பல்வேறுபட்ட வணிகங்கள் வணிகர்கள் வாழ்வதற்கு ஏற்ற இடமாக அவை அமைந்துள்ளன. வணிகர்கள் மன்னர்களுக்கு இணையான சிறப்பினைப் பெற்றுள்ளனர். வணிகர்களுக்குப் பல்வேறு பட்டங்களை வழங்கிச் சிறப்பித்துள்ளனர். பண்டைத் தமிழகத்தில் உள்நாட்டு வாணிகம் மற்றும் வெளிநாட்டு வாணிகம் ஆகியவை சிறப்புற நடைபெற்று வந்துள்ளமையை இதன்வழி அறியமுடிகின்றது.



ISBN 978-93-80368-38-2

ISBN 978-93-80368-38-2